Vol. XXVIII 1953—1954

# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

இருபத்தெட்டாம் சிலம்பு

கா. அ. இராமசாமிப்புலவர்,
கருப்பக்கிளர். (அஞ்சல்)
கோட்டூர் வழி, தஞ்சை மாவட்டம்.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
லிமிடெட்.

வள்ளுவர் ஆண்டு
௧௯௮௪—௧௯௮௫

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.,

All Rights Reserved] Thirunelveli. :: Madras-1. [Price Rs. 6-0-0

## 'செந்தமிழ்ச் செல்வி'

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்

## EDITORIAL BOARD MEMBERS

க. திரு. டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள்,
எம்.ஏ., பி.எச்.டி., தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

உ. ,, 'சித்தாந்த கலாநிதி' வித்துவான், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழ் விரிவுரையாளர் தியாகராயர் கல்லூரி, மதுரை.

ங. ,, துடிசைகிழார், அ. சிதம்பரனார் அவர்கள், கோயமுத்தூர்.

ச. ,, வித்துவான், மு. இராசாக்கண்ணனார் அவர்கள்,
பி. ஓ எல். (ஆனர்ஸ்) எம். ஈ. எஸ்., அரசினர் கல்லூரி, சென்னை.

ரு. ,, வித்துவான், பண்டித. கா. பொ. இரத்தினம் அவர்கள், பி.ஏ., (ஆனர்ஸ்), பி.ஓ.எல்.
அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

சு. ,, 'சித்தாந்த பண்டிதர்' ப. இராமநாதபிள்ளை அவர்கள்,
கழகப்புலமையாளர்.

எ. ,, செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமிபிள்ளை அவர்கள்,
கழகப்புலமையாளர்.

# உள்ளுறை


பக்கம்

அருமைச் சகோதரர்—திருவாட்டியார்
பண்டிதை, எஸ். கிருஷ்ணவேணி அம்மையார் ௭௬
அறிவுக் களஞ்சியம்—திருவாட்டியார்,
இராசரத்தினம் அம்மையார் எம்.ஏ., எல்.டி ௧௩௭
அன்பு நிலைகண்ட ஆசிரியையார்—பண்டித. வித்துவான்,
திரு. த. வடிவேலன் ௫௬௨
அன்பும் அறமும்—டாக்டர்,
திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் ௭௫
ஆட்சி நிலை—நெல்லை. திரு க சுப்பிரமணியன் ௩௩௬
ஆட்சிமொழி மாநாட்டு நிகழ்ச்சிகள்—முத்தமிழ்மணி ௨௨௧
இரங்கலுரைகள் ௮௩, ௧௪௫
இரங்கற்பாக்கள் ௯௫, ௧௫௧
இரசிகமணி டி. கே. சி. பிரிவு—இதழாசிரியர் ௩௧௩
இராச நாயகம்—பெருமழை, புலவர்.
திரு பொ. வே. சோமசுந்தரனார் ௪௦௧, ௫௩௭
இருகுறட் பொருண்மை—திரு. பி. எல். சாமி, பி எஸ்.ஸி. ௪௧௯
இள மாணாக்கன்—நெல்லை. திரு. க சுப்பிரமணியன் ௨௧
'உடையப்பக் காஞ்சி'—செல்லூர்க்கிழார்,
செ. ரெ. இராமசாமிபிள்ளை ௩௭௬
உடையப்பா பிரிவு—இதழாசிரியர் ௩௬௧
'உத்தமம் சூழ்ந்த கெங்கயநாயக்கர்பாளையம்'
—திரு. தி. பொ நாராயணசாமி பாரதி ௨௫௭
எங்கள் தந்தை—திருவாட்டியார்,
வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார், சென்னை ௮௨
எல்லாம் தமிழ்—திரு. வே. நடராசன், மழையூர் ௧௯௦
எழில் உருவம்—சித்தாந்த கலாநிதி,
திரு. ஔவை. சு. துரைசாமிபிள்ளை ௬௮
எழுத்துப் போலி—வித்துவான், திரு. ந. சண்முகசுந்தரன் ௪௭௦
எழுத்தும் புணர்ச்சியும்—செல்லூர்க்கிழார்,
திரு செ. ரெ. இராமசாமி பிள்ளை ௪௬௫, ௫௩௩, ௫௫௭
என் உள்ளங்கவர்ந்த ஆசிரியர்—டாக்டர்
திரு. அ சிதம்பரநாதச் செட்டியார், எம்.ஏ. ௧௨௪
என் உளங்கவர்ந்த ஒருவர்—செல்லூர்க்கிழார்,
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௧௬௮
ஏரி நிறைந்தனைய செல்வர்—திரு. வல்லை. பாலசுப்பிரமணியம் ௬௯
ஔவையார் திரைப்படம்—செல்லூர்க்கிழார்,
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௧௬௯
கயவர்—திரு. பி. எல். சாமி, பி.எஸ்.ஸி. ௨௯௧

கரந்தைக் கவியரசு மறைவு—பேராசிரியர்,<br>
திரு. ஔவை. சு. துரைசாமிபிள்ளை, மதுரை ௨௪௬<br>
கலைக்களஞ்சிய வெளியீட்டு விழா ௪௧௬<br>
கலைச்சொல்லாக்கம் வேண்டாவா ?<br>
—வித்துவான், திரு வி. பொ. பழனிவேலன் ௪௨௩<br>
கலையா கொலையா ?—பண்டிதர்,<br>
திரு. சு. சிவப்பிரகாசம் பிள்ளை ௨௯௯<br>
கலையும் பண்பாடும்—வித்துவான், பண்டிதர்,<br>
திரு. கா. பொ. இரத்தினம் M.A , B O L. ௧௭<br>
கல்வி—நாஞ்சில், திரு கா. கணபதி ௪௩௪<br>
கன்னடமும் தமிழும—மயிலை திரு. சீனி. வேங்கடசாமி ௨௭௩<br>
கன்னன் கண்ட கனவு—கோபாலை திரு வே. பெருமாள் ௨௭௧<br>
காதலும் கற்பும்—திரு. மா. ரா. இளங்கோவன் ௩௬௭<br>
காந்தியடிகளும் திருவள்ளுவரும்<br>
—திரு. கா. பொ இரத்தினம், எம்.ஏ., பி.ஓ எல். ௧௮௫<br>
கிராமம்—திரு T. V. சதாசிவ பண்டாரத்தார் ௨௫௪<br>
குருகுல வாழக்கை—வித்துவான், திரு. செ வேங்கடராமச்<br>
செட்டியார், S. V. O கல்லூரி, திருப்பதி ௩௩௭<br>
குறுகத்தறித்த குறள்—திரு. பி. எல். சாமி, பி எஸ்.ஸி. ௫௨௨<br>
கையறுநிலை, (ந. சிவகுருநாதபிள்ளை)—சித்தாநத பண்டிதர்,<br>
ப. இராமநாதபிளளை, கழகப புலமையாளர் ௧௬௬<br>
கோசர்—விததுவான்,<br>
திரு. ஆ சிவலிஙகனார், மயிலம் ௨௮௭, ௩௨௧, ௩௮௪<br>
சடையவள்ளல்கள் இருவர்—துடிசைகிழார்,<br>
திரு. அ. சிதமபரனார் ௩௩<br>
சித்தாந்தப் பேராசிரியா<br>
—திரு. ஔவை சு. துரைசாமி பிள்ளை, மதுரை ௧௬௭<br>
சிவானந்த சிவாச்சாரிய அடிகளார் சிவனடிநீழல் எய்துதல் ௪௪<br>
சிறுதேர்—வித்துவான், திரு சொ. சிங்காரவேலன் ௧௭௭<br>
சிறறெறும்பும் சிள்வண்டும்—திரு. வே. பெருமாள் ௩௫௧<br>
செந்தண்மை பூண்ட அந்தணர்—திரு. ஆ. அருள் தங்கையா ௭௭<br>
செந்தமிழண்ணல் பிரிவு—இதழாசிரியர் ௪௯<br>
செம்புலப் பெயல்நீரா—திரு எஸ். கண்ணன் ௧௮௩<br>
செய்திகளும் குறிப்புக்களும்<br>
௪௬, ௨௧௪, ௨௬௪, ௩௦௭, ௩௫௮, ௪௦௭, ௪௫௩, ௫௦௨, ௫௪௯<br>
செல்வியின் புத்தாண்டு—இதழாசிரியர் ௧<br>
செழுங்கலை விநோதர்—திரு. பூ. சமரபுரி முதலியார் ௧௨௮<br>
சொல்வல்ல இனிய நாவான்—புலவர் ‘ அரசு ’ ௬௦<br>
தந்நலமற்ற தமிழ்த் தொண்டர்—மகாமகோபாத்தியாய<br>
பண்டிதமணி. திரு. மு. கதிரேசச் செட்டியார் ௮௧


தமிழகத்தில் உழவு—புலவர். திரு. கா. கோவிந்தன், எம்.ஏ, ௨௨
தமிழகத்தின் பெருந்தகை—திரு. கா. அப்பாத்துரை,
எம்.ஏ , எல்.டி., ௭௩
தமிழக வரலாறு மாநாடு—இதழாசிரியர் ௨௬௫
தமிழர் தனிப்பெருங் கடன்—புலவர் திரு. சுப்பிரமணியன் ௬
தமிழாசிரியர் மாநாடு ௫௫௩
தமிழ் ஆட்சிமொழி ஆகவேண்டும்—இதழாசிரியர் ௨௧௭
தமிழ்க் கலைச் சொற்கள்—திரு பெ. பொ. சிவசேகரம்,
திருவள்ளுவர் கழகம், திருக்கோணமலை ௩௦௧
தமிழ்க்கொலை—திரு. பி எல். சாமி, பி எஸ்.ஸி., ௧௯௩
தமிழ்த்தாயின் தவப்புதல்வர்—திருவாட்டியார்,
பண்டிதை, எஸ். கிருஷ்ணவேணியம்மாள் ௧௩௬
தமிழ்நாட்டுச் சிற்பக் கலைகள்—மயிலை,
திரு சீனி. வேங்கடசாமி ௨௪௯
தமிழ்ப்புலவா மாணவர் தேர்வு ௨௧௪, ௫௪௬
தமிழ்ப் பேரறிஞர் மறைவு—திரு ஆ பழ. குமரப்பன் ௧௪௩
தமிழ மகவு தாலாட்டு—புலவா,
திரு. ராம. பெரிய கருப்பன் ௨௭௮, ௩௪௩
தமிழ் முனிவர்—பண்டிதர்,
திரு கா. பொ. இரத்தினம், எம்.ஏ., பி.ஓ.எல். ௬௫
தமிழ் முனிவன திருமலை அன்றும் இன்றும்—கணியர், டாக்டர்,
திரு இ மு. சுப்பிரமணிய பிள்ளை ௨௦௯
தமிழ் மொழி—திரு. கி வேங்கடசாமி ௩௯௨
திங்களைப் போற்றுதும்—திருவாட்டி,
மாசிலாமணி அம்மையார் ௩௧௭
திருக்குறளில் சங்க இலக்கிய மணம்—டாகடர்,
திரு மு. வரதராசனுர் ௩௬௬
திருக்குறள் அகவல்—வித்துவான், திரு. மா. வேதாசலம்
எம.ஏ., பி.ஓ.எல். ௨௬௧, ௩௪௪, ௪௪௦, ௪௭௯, ௫௪௫
திருக்கோவையார் ஆராய்ச்சி—சித்தாந்த பண்டிதர்,
திரு. ப. இராமநாத பிள்ளை ௪௦
திருநாட்டின் திருநெறி—பன்மொழிப் புலவர்,
திரு. கா. அப்பாத்துரை, எம் ஏ., எல் டி. ௪௯௩
திருவடிப்பேறு எய்திய சிவகுருநாதர்—இதழாசிரியர் ௧௫௭
திரு வி க. வின் சேமவைப்பு—செல்லூர்க்கிழார்,
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௧௦௨
திரு. வி. க. வின் வாழ்க்கைக் காலக்குறிப்பு ௧௦௯
தீந்தமிழக் களஞ்சியம் திரு. வி. க.—புத்தனேரி,
ரா. சுப்பிரமணியன் ௯௩
து. சு. கந்தசாமி முதலியார் பிரிவு—இதழாசிரியர் ௫௦௫

தூ. சு. கந்தசாமி முதலியார் கையறவு நிலை—வித்துவான்,
திரு. மு. சங்கரலிங்கம் ருசச
தூதின் தூய்மை—பண்டிதை, திருவாட்டி,
எஸ். கிருஷ்ணவேணி அம்மையார் சஙரு
தொழுவதால் உண்டே துணிவு—திரு க. வெள்ளைவாரணன் கூச
நாகரிகப் பண்பாளர்—வித்துவான்,
திரு. அ மு. பரமசிவானந்தம், எம்.ஏ எஉ
நாடக நலன்—டர்பன், தி. ச. மு. பிள்ளை அவர்கள் ஙகூங
நால்வர் செல்லாக் கோவில்களா?—சித்தாந்த பண்டிதர்,
புலவர், ப. இராமநாத பிள்ளை ருக0
நான் அறிந்த பண்டிதமணி—வித்துவான்,
திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார் கசஉ
நூல்நிலையம் எரிந்தது—திரு கி. ஆ. பெ. விசுவநாதம் எ0
பண்டிதமணி பண்பு—பேராசிரியர்,
திரு. கா. பொ. இரத்தினம், எம்.ஏ., பி.ஓ.எல். கஉகூ
பண்டிதமணி மறைவு—இதழாசிரியர் ககச
பண்டிதமணியா? இரசிகமணியா?
—திரு சாமி வேலாயுதம் பிள்ளை பி.ஏ, எல்.டி. கஙங
பண்டிதமணியார் தனிச்சிறப்பு—செல்லூர்க்கிழார்,
திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை கசச
பண்டிதமணியின் உயர்வு—டாக்டர், திரு. மு. வரதராசனார் கஉங
பண்டிதமணியின் சிறப்பு—பண்டித வித்துவான்,
திரு லெ. ப கரு. இராமநாதன் செட்டியார் கஉசு
பண்டிதமணியின் சொல்லின்பம்—வித்துவான், திரு.
செ. வேங்கடராமச் செட்டியார், ங0சு
பண்டிதமணியின் மாண்பு
—திரு. ஔவை சு. துரைசாமி பிள்ளை, மதுரை கஉ0
பண்டிதமணியின் மேன்மை—வித்துவான்,
திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, எம.ஏ., பி.எல். கஙகூ
பள்ளி மாணவர் வார வழிபாடு—சித்தாந்த பண்டிதர்,
திரு. ப. இராமநாதபிள்ளை, கழகப்புலவர் ருகசு
பாராட்டுக் கூட்டத் தலைமையுரை ருஅகூ
பிரிவிரங்கற்பா—திரு. அ. மு. சரவண முதலியார் கசஅ
பெண்ணாகடம் தமிழ் ஆட்சிமொழி மாநாடு—இதழாசிரியர் ச0கூ
பெண்ணாகடம் தமிழ் ஆட்சிமொழி மாநாட்டு நிகழ்ச்சிக்
குறிப்புக்கள்—திரு. பழமநீ சகஉ
பெரியபுராணப் பேருரை அரங்கேற்ற விழா—இதழாசிரியர் சருஎ
பெரும் பேராசிரியர்
—வித்துவான், திரு. மு. அருணாசலம் பிள்ளை கஉஎ
பேசும் தமிழ்—திரு. சாமி சகூஎ

பேருரையாளர்
—திரு. ச. சோமசுந்தரபாரதியார் எம் ஏ., பி.எல். கசக
பொங்கல் நன்னுள் வாழ்த்து—செல்லூர்க்கிழார்,
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை உசரு
பொன் மொழிகள்—திரு. வி. க. க0ச
பொன் மொழிகள—பண்டிதமணி கருசு
மகாமகோபாத்தியாய பணடிதமணி மு. கதிரேசன் செட்டியா ரவர்கள பிரிவுககு இரஙகிககூறிய கையறுநிலைப் பாககள் —மதுரைத் தமிழ்ப பேராசிரியர் திரு. ஆ. கார் மேகக் கோனுர் உகரு
மணியின் மறைவு—டாக்டர், திரு. மா. இராசமாணிக்கனுா எம் ஏ., எல் டி., எம ஓ எல்., பி.எச்.டி கரு அ
மதிப்புரை உகரு, உசுஉ, ருகக, ருருசு, சருசு, ரு0ச, ருருக
மருட்கை—புலவர், திரு பொ வே. சோமசுநதரனுர் ருருக
மலையும அணியும்—திரு சேனுபதி சசுச
மறைநத பண்டிதமணி—துடிசைகிழார், அ. சிதம்பரனுர் கச0
மறைமலையடிகள் மாண்பு
—நெல்லை. திரு. க. சுப்பிரமணியன் கசுசு
மறைவுற்ற தமிழ் நூல்கள—மயிலை. திரு சீனி வேங்கடசாமி ருஎஎ, சஉரு, சஅக, ருஉரு, ருசுக
மாங்குடி மருதன் இயலோவியம்
—புலவர், திரு. பொ. வே. சோமசுநதரனுர் உ0ரு
மாண்ட மாணிக்கம்—திரு. கா இரா. நீலகண்டன் கஉரு
மாபெரும் புலவர்—திரு. அ. கிருஷ்ணமூர்ததி,
M.A., B L., B.O L., (HONS) M.E.S. கசக
மீட்டும் வருவார்—திரு. அ. ச. ஞானசமபந்தன், எம்.ஏ. சுச
மேரி கோரிலி—டாபன், திரு. ச. மு. பிள்ளை உஎ
யாரால் மறை பெய்கிறது?—மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி ருசஎ
வளளல் பாரி—திரு. அ. குருநாதன் சஎஎ
வள்ளுவர் ஓர் உயிர நூற் புலவா—செல்லூர்க்கிழார்
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை கக, கசுஎ
வள்ளுவர் காலம்—திரு. கு. பரமசிவம உஎசு, ருருரு, ருஅஎ, சசக
வள்ளுவன் சொல்லே வேதம்—பேராசிரியர்,
கா. பொ. இரத்தினம் எம்.ஏ , பி.ஓ.எல்., கொழும்பு உசுசு
வாழ்க்கையில் இரண்டு—நெல்லை திரு. க. சுப்பிரமணியன் சசுசு
வாழக்கை வரலாறு (திரு. வி. க.)—செல்லூர்க்கிழார்,
திரு செ. ரெ. இராமசாமிபிள்ளை ருசு
வாழ்வின் கடைக்கோட் காலம்—வித்துவான்,
திரு செ. வேஙகடராமச் செட்டியார் ருஅரு
வான்கோழியும் வன எறும்பும்—திரு. வே. பெருமாள் கஎரு

# படங்கள்

| | |
|---|---|
| | பக்கம் |
| அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் | ௪௧௮ |
| ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 1854) வட ஆற்காடு மாவட்டத்தின் நிலப்படம் | ௪௦௭ |
| இரசிகமணி, டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் | ௩௧௩ |
| உடையப்பா அவர்கள் | ௩௬௧ |
| சம்பந்த முதலியார் 80-ம் ஆண்டு விழாவில் திரு. வி. க. | ௫௭ |
| சித்தாந்தப் பேராசிரியர், ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள் | ௧௫௭ |
| சிவானந்த சிவாசாரிய அடிகளார் | ௪௪ |
| தமிழக வரலாறு மாநாட்டு நிழலோவியம் | ௨௬௫ |
| தமிழாசிரியர் மாநாட்டு நிழலோவியம் | ௫௫௩ |
| தமிழ் ஆட்சிமொழி மாநாட்டு நிழலோவியங்கள் | ௨௧௭, ௨௨௭ |
| தருமாம்பாள்—மயிலை சிவமுத்து மணிவிழாவில் திரு. வி. க. | ௫௭ |
| திரு. வி. கலியாணசுந்தர முதலியார் | ௫௬, ௫௭ |
| தூரன் அவர்கள் | ௪௧௬ |
| பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் | ௧௧௩ |
| பெண்ணாகடம் ஆட்சிமொழி மாநாட்டு நிழலோவியங்கள் | ௪௦௮ |
| மறைமலையடிகள் இரண்டாம் ஆண்டு நினைவு விழாவில் திரு. வி. க. | ௫௭ |




சிலம்பு ௨அ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௪, ஆவணி செப்டம்பர், 1953 | பரல் ௧

# செல்வியின் புத்தாண்டு

எல்லாம்வல்ல இறை சிவனருளால் நம் செல்விக்கு இருபத்தேழாட்டைப் பருவம் கடந்தது, புதுவதாக இதுகாலை இருபத்தெட்டாம் அகவைப்பருவம் துவக்குறுகின்றது. இப் புது நாள் வருகை குறித்து அகமிக மகிழ்கொள்ளும் நம் தமிழகம். ஏன்? நம் செல்வி நம் தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் செய்த பணிகள் பலப்பல. ஆகலான், யாமும் மகிழ்கின்றோம்.

நம் செந்தமிழ்மொழி இயற்கைச் செம்மொழி, அது மெல்லிய இனிய எளிய சொற்கள் செறிந்தது; எழுத்துப் பெருக்கமில்லாத சிறுசிறு சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்டு மிளிர்வது; கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றியது, அது, கனியினும் இனிது; கட்டிபட்ட கரும்பினும் இனிது, இம்மொழி, முதல் இடை கடை யென்னும் முச்சங்கத் தொட்டிலில் பாண்டிவேந்தர் தாலாட்டிப் போற்றி வளர்க்க வளர்ந்தது, அது வையை வளத்தில் தவழ்ந்தது; அது பொய்யில் புலவர் மெய்ந்நாக் கால்வழியோடி நாட்டுப் புலத்தில் நன்கு பரவியது, இயல் இசை நாடகம் என்னும் முப்பண்புடையது. இதன் சுவையில் ஈடுபாடுற்ற புலவர் பெருமான் ஒருவர்,

> ‘இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
> விருந்தமிழ்தம் ஆனாலும் வேண்டேன்’ (தமிழ்விடு தூது)

என்று உண்மையை உரைத்து மகிழ்ந்தார்.

நம் தமிழ்மொழியின் மெல்லொலி பிற எல்லாவகை மொழி கட்கும் மூல ஒலியாக உள்ளமை ஆராய்ச்சியாளர் நன்குணர்வர்,

இதன் ஒலி ஒன்றுமே பிறமொழிகளின் ஒலிகளையெல்லாம் அளந்துகாட்ட வல்லதென்று ஒலியிலக்கண வல்லுநர் திரு. பா. வே மாணிக்க நாயகர் நிறுவிக்காட்டினார். இதன் நுணுக்கத்தை இயற்கை நுட்பத்தால் ஆழ்வாரொருவரும்,

'செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி'

என்று தமிழின வல்லோசையே வடமொழியாயிற்று எனக் கூறுவது மேற்குறித்த ஆய்வுக்கு அரண் செய்வதாகும்.

இந் நுட்ப முணராத ஒருசிலர், வடமொழி யெழுத்து, ஆங்கிலமொழி யெழுத்து பிறமொழிகளின் எழுத்துக்களை யெல்லாம் தமிழ் நெடுங்கணக்கின் இடையே செருகி வழங்க வேண்டுமென வாதாடுவர் அவர்தம் புல்லிய வழக்காட்டிற்கு விடையை நம செல்வியின் அகத்தே காணலாம் அது வேற்று மொழி எழுத்துக்களின் ஒலிக்கேற்ற எழுத்தைத் தமிழ் எழுத்துக்கள் இணைந்தொலிக்குமாறு காட்டி வழிகோலிச் செல்வதேயாம் ஒவ்வோர் மொழிகளில் உள்ள எழுத்துக்களுக் கெல்லாம் அவ்வம் மொழி யெழுத்துக்களைக் கொண்டுவந்து புகுத்திக்கொண்டே போனால் தமிழின் தூய உருவமும் ஒலிப்பு நயமும் கெடுதலோடு தமிழ ஒரு தனிமொழி—செம்மொழி யென்னும் பண்பாடு மாறிக் கலப்புமொழியாய் - ஏனைய கன்னட - மலையாள—தெலுங்கு மொழிகள் போன்று திரிபு மொழியாய் மாறிவிடுமென்பதை நம செல்வி நாட்டுக்கு எடுத்துணர்த்திற்று.

எழுத்துப் பெருக்கிற்கு இடங்கொடாது 'தன் கையே தனக்குதவி' என்னும் பழமொழிக்கிலக்காகத் தமிழ்மொழி எழுத்துக்களைக்கொண்டே எவ்வகை மொழிச்சொற்களையும் அமைத்துக்காட்டி வெளிவருவது நம் செந்தமிழ்ச்செல்வி. இம் முறையைப் பிற போலித்தாள்கள் தூற்றுவதுண்டு. அவை யெல்லாம் நாடு, கலை, மொழி முதலியவற்றின் ஆக்கத்தை நிலைக் களனாகக்கொண்டு இயங்குவன அல்ல. எம் செல்வி ஒன்றுதான் தமிழாக்கங்கருதி வெளிப்போந்து பண்டைய தமிழர் பண் பாட்டை மீட்டுக்கொணரக் கரந்தை சூடி மிளிர்கின்றதென எக்கழுத்ததோடு மொழிகின்றேம்.

இத்தகைச் சிறப்போடு வெளிப்போந்துலவும் நம் செல்வியே மொழியின் வளர்ச்சிக்கு—இற்றைஞான்று நாட்டில் எங்கும் ஏட்டிலும் வழக்கிலும் தனித்தமிழ் உணர்ச்சிக்குக்—காரணமாகு மெனின், அது புகழ்ச்சியாகாது; மிகையுமன்று. நம் செல்வி நாட்டில் புற்றீசல் போன்று தோன்றி மறையும் ஒருவகைக் கொள்கையுமில்லாத இதழன்று, இது தனித் தமிழுக்கென— இலக்கிய வளர்ச்சிக்கென—செந்தமிழ் உரைநடை வளத்துக்

கென—தமிழா நாகரிகத்துக்கென—ஒழுக்க வளத்துக்கென—சைவசமயக் கொள்கைக்கென—தோன்றி மலாந்து புது மணங் கமழும் திங்கண் மலா. இதனை இடைவிடாது தொடர்ந்து வாஙகிப பயிலவாா தமிழ்பபெருமபுலவராவதுடன் கலைஞராய், அறிஞராய், தமிழப பணபினராய், சமயக் கணககராய் எததிசையும் புகழமணக்க இலகுறுவார்களென்பது திண்ணம.

இவைகளைத தன குறிககோளாகக கொண்டு தன்னகத்தே தாங்கி நாட்டின பலவிடங்கட்கும நம செல்வி சென்று தன் ஒளிககதிாகளைப பரபபிக்கொணடு வருகின்றது அதனால் ஆஙகாஙகே தனிததமிழாாவம் பொங்கித் ததும்பிப் போதரலாயிறறு. ஆயினும நாடடில பெருமபாலான மாநதா் வேடிக்கைக கதைகளினும அயலநாடடுககலை, அயலநாட்டு நாகரிகம இவைகளினும பறறுககொணடே யிருததலால், இவவரிய வெளியீட்டின் நறபயனை அடையும் வாய்பபறறிருககினறனா. எனினும அத்திபூததாறபோல நூறறுககு ஒரிரு விழுக்காடான மககளே இசசெலவியின் இனசுவைத தேனைப் பருகும பேறறினராகினறனர். அதனால் செலவியின் ஊதியம குறைநதே வருகின்றது அருளெனனும அன்பின குழவியையும் பொருளெனனும செலவச் செவிலியே வளாபபாளாயின, மொழித தொணடு கலைததொண்டுபுரியும செலவிக்குப பொருட் செலவச் செவிலி துணையாக வேணடபபெறுகினறாள்

எனவே, இருபான் எண்ணகவைப்படியில் நிறகும செல்விக்கு, எம் கையொப்ப அன்பாகள் ஒரிரு கையொபபமாவது சோததுதவின, எம செல்வி நஙகை புத்தணிபூணடு பொன்னுடை போர்த்துப் பொன்றுப பொலிவுடன் நாவலர்தம வாய்வீதி நாளும் உலாப்போந்துலவுவள். இக்கலைப்பணியைத் தலைப் பணியாககொண்டு உதவுவது ஒவ்வோர் தமிழ்மக்களின் முதற் பெருங கடமையும தொண்டுமாகும

இச்செல்வியிற் போதராத அருமபொருள் எவையுள்ளன? யாவும் ஒருஙகே காண்டுமன்றே இதனகண் பண்டைக்காலத் தமிழ்நாடு கலை மொழி செல்வநிலை முதலியனவும், முடியுடை வேந்தா் மூவர்கள், வளளல்கள், குறுநில மன்னாகள், புலவாகள், பிற வரலாறுகள் யாவும் புலத்துறை முற்றிய நலத்துறைப் புலவர்பெருமக்களால் அகசசானறு புறச்சானறுகளுடன் தெள்ளத்தெளிந்த தனித்தமிழ உரைநடையில் தெளிததுக் காட்டி வெளிவந்துள்ளன; வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இச் செல்வி காலத்துக்கேற்ற கருத்துரைகளையும் சுமந்து செல்கின்றாள். அரசியல், பொருள்நிலை முதலியவற்றினும் பணி

புரிந்து வருகின்றாள். தற்கால அறிஞர்கள், புலவர்கள், கலைஞர்கள் வரலாற்றுண்மைகளையெல்லாம் அவர்தம் உருவ நிழலோவியத்துடன் தன்னிடம் கொண்டு பிற்காலச் சான்றோர்கட்கு—வருங்கால மக்கட்குப் பயனுறும்வண்ணம் வழித்துக் காட்டி வருகின்றாள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பழங்காலத் தமிழன் அறத்தைக் கடைப்பிடியாகக்கொண்டு எந்நாட்டவராயினும் அறிஞராக இருப்பின் அறிஞரென்னும் முறையில் நாட்டுவேறுபாடு கருதாது அவர்தம் வரலாற்றைத் தமிழ்மாந்தர்களும் அறிந்தின்புறக்கொண்டு வெளிவருகின்றாள்.

கடந்த ஆண்டில் தமிழ்நாட்டின் நாற்பேரெல்லை குறித்த குழப்பநிலை நாட்டில் நடமாடியபோது, 'தமிழக எல்லை' என்னும் தலைப்பில் பண்டைநாள் தமிழகம் அமைந்திருந்த எல்லையின் அளவினை முந்துநூற்சான்றும் பிற்காலச் சான்றுங்கொண்டு சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல அமைந்து நடுநின்று காட்டி விளக்கித் தெருட்டினாள்.

பின்னர் ஆந்திரநாட்டுப் பிரிவினைக்காக வந்து யாவும் உசாவி ஆய்ந்த நீதிபதி வாஞ்சு வெள்பா வகுத்துக்காட்டிய தமிழக எல்லை, நடுநிலைக்கு முரண்பட்டதாக—நாட்டெல்லையின் அளவிற்குக் குறைபட்டதாக—இருந்தநிலையறிந்து '**வாஞ்சு வகுத்த தமிழக எல்லை ஒவ்வா**' என்னும் தலைப்பிட்டுக் கட்டுரை கொண்டு அரசியலாருக்கும், நாட்டுமக்கட்கும் உண்மையை யுணர்த்திக் கிளர்ச்சி யூட்டினாள்.

குறும்பாவானியன்று நறுஞ்சுவைமிக்கதாய், உலகியல் கூறிப் பொருளிதுவென்ற அறச்சுடராய், நானிலமாந்தர் யாவரும் இஃது எம் அறநூல், எம் சமயநூல், எம் அருள்நூல் எனப் போற்றிவரும் கதிர்மணியாய், அருங்கலப் பேழையாய்த் திகழும் திருக்குறட் பெருநூலைப்பற்றி எல்லா மக்களும் உணர அதன் நுண்பொருள்களை, எண்பொருளவாக—தம் பொருளவாக—அம் பொருளவாக—செலச்சொல்லி விளக்கினாள், விளக்கு கிறாள், விளக்கிவருவாள் எம் செல்வி.

> 'ஓதுசம யங்கள்பொருள் உணரும் நூல்கள்
> ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
> யாதுசம யம்பொருணூல் யாதிங்கென்னின்
> இதுவாகும் அதுவல்ல தெனும்பிணக்க தின்றி
> நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
> நின்றதியா தொருசமயம் அதுசமயம்'

என்னும் அரியமொழிக்கு இலக்காகத் திகழும் எம் சைவ சமய உண்மையை அறிவியலோடொத்து உணரும்வண்ணம்

எம் செல்வி உலகினர்க்குப் பெருமுழக்கத்தோடுணர்த்திக் கொண்டே வருகின்றாள்.

இவ்வாறு காலமும் இடமும் நோக்கி நம் செல்வி ஆற்றி வரும் நாட்டுத்தொண்டு, மொழித்தொண்டு, கலைத்தொண்டு, பிறதொண்டுகளெல்லாம் அளப்பரியன. செல்வி நாட்டில் நிலவுவது பொருளீட்டற்கன்று. நாட்டை வளர்க்க, மொழியை முதன்மைக்குக்கொணர, கலையைப்பேண, நாகரிகத்தைப் பரப்ப, சமய நுண்கலையைச் சாற்றவே.

இப்புத்தாண்டில் கற்றுத்துறைபோய நற்புலமையோர் பலர் அரும்பெரும் நுண்கருத்துக்கள் செறிந்த கட்டுரைகள் வரைந்துதவ முன்வந்துள்ளனர். ஆகலான் செல்வி கடந்த ஆண்டுக்காலத்தினும் பன்மடங்கு வீறுற்றுத் திகழுவாள். செல்வியின் நோக்கம், தமிழர் நாகரிகம் நாடு மொழி கலை பண்பு கடவுட்கொள்கை சீர்திருத்தம் முதலியன பேணுவதே. இவைகட்கு நாட்டில் மாறுபாடு தோன்றின் அவைகளைக் களைந்தொதுக்க மடிதற்று முனைநிற்பாள்.

இவ்வாறு செயற்கரிய செய்துவரும் எம் செல்வியைப் பேணிக்கற்றல் தமிழர்தம் கடப்பாடன்றோ? செல்வி நம் தமிழ் மக்கள் யாவர்களின் கையகத்தும் நாவகத்தும் நடம்புரியும் நன்னாளே பொன்னாளாகும் அந்நாளே எம் தமிழரசி அரியணையேறி ஆட்சிபுரியும் திருநாளாகும்; அன்றே நம் தமிழ்நாடு நாடாக வீறுற்றுத் திகழும். அன்றே,

> ‘கல்லாது நிற்பார் பிறரின்மையால் கல்விமுற்ற
> வல்லாரும் இல்லை’

என்னும் பொன்மொழிக்கு இலக்காக எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தி ஓங்குவார்களென்பது உறுதி.

ஆகவே, தமிழ்ப் பெருமக்களே! எம் செல்வியின் ஆக்கத்துக்கு ஊக்கந்தந்து பல்லாற்றானும் தம்தம் அன்பையும் ஆதரவையும் கடப்பாட்டோடு உதவ முன்வர வேண்டுகின்றோம்.

> ‘கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
> என்னாற்றும் கொல்லோ உலகு’

என்னும் வள்ளுவர் வான்மறையை எடுத்துக்காட்டி, செல்வி வளர்ச்சிக்குத் துணைபுரியவேண்டிக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசிரியர்.

# தமிழர் தனிப்பெருங்கடன்

[புலவர் திரு. சுப்பிரமணியன, கோவை.]

உலகப் பிறவியுள்ளே சிறந்தது என்று இன்று உயர்த்துக் கூறபபடுவது மக்கட் பிறப்பே ஏனென்றால உலக வுறுப்பு ஐந்தினின்றும எழும் குணங்களாகிய ஐம்புலனை ஏற்றுக் கொளளும ஐமபொறியோடு, வானினும பரந்தகன்ற மனத் தினையும, அவறறோடு எவவுயிர்க்குமிலலாத பேசுந் திறனையும் பெறறதனால, இனறு ஐமபொறியுணாவே அழியினும பேசுந திறமுடையான் மனிதன் எனறே போற்றப்படுகின்றான். எனவே இன்று, இலலை; அன்றும என்றும் மனிதனை மனித னாக்குவது மொழியன்றோ? இம மொழியலலவா ஒற்றுமை, உயாவு, பற்றுதல, பண்பு, பெருமை, பெருமிதம் முதலிய இன்ன பிற எலலாவற்றையும கொடுககின்றது? இது கருதி யல்லவா,

> "எழுததறியத தீரு மிழிதகைமை தீாந்தான்
> மொழிததிறததின முட்டறுப்பா னாகும்—மொழித்திறததின்
> முட்டறுதத நலலோன முதனூற பொருளுணர்ந்து
> கட்டறுததது வீடு பெறும"

என்றொரு தமிழப பெருமபுலவரும புகனறு போந்தார். அஃதாவது, எழுத்தும, சொல்லும, பொருளும் நிறைநத நூற களை முறையே கறகக் கறக உலக உண்மையினை உணர்ந்து இவ்வுலகத் தளையிலிருநது விடுதலையடைவான் என்பது ஈஙகு வீடு என்பது ஏதோ ஓர் உலகம் என்பதல்ல. உலகவாழ்வில் அறியாமையால, மனக கோளாற்றால வரும் துனபம் தீர்ந்து திருநாவுக்கரசா கூறியதுபோன்று,

> "எந்நாளு மினபமே துன்ப மில்லை"

என்ற நிலையினை யடைதலேயாம். இதனையே வளளுவரும்,

> "இன்பம் விழையான் இடுமபை யியல்பென்பான்
> துன்ப முறுத லிலன்"

என்றா. ஆகவே மேற்கூறியவாற்றால் மக்களை மக்களே என்று கண்ணுறுத்தும நிலையினை யளிபபது மொழியே என முட்டின்றி விழி தெளியவறிநதோம. இது கருதியன்றோ சிவப்பிரகாசரும,

> "மொழியிலார்க கேது முதுநூல தெரியும்
> விழியிலாாக் கேது விளக்கு"

என்றார்.

ஆயின் உலகில் இம் மொழியினையும் தியநிலையில் பயன் படுத்துவாரே பலர் ஏனெனில உலகில எப பொருளும் தனித் தீயதும, தனி நல்லதும இல்லாது பயன்படுததுவார உளத திற் கேற்றவாறு உதவுமாகலான், சிறசில வேளையில மனிதனைப் பொறுமையால நாயாகவும, சீற்றததால பாமபாகவும, களவால கழுகாகவும், சூழ்சசியால் நரியாகவும, தோற்றத்தால் வேஙகையாகவும, விடாபபிடியால முதலையாகவும, காலததிற் கேற்றவாறு நடத்தலால் பச்சோநதியாகவும, பிறரை ஒட்டி வாழ்தலால் அட்டையாகவும, அசசததால நததையாகவும இவைபோலும பலவுமாகவும மாறும வேறொன்றிற்குமில்லாத இயலபினைக கொடுபபதும, கெடுபபதுவு மிதுவாக அமைகினற தல்லவா? எனவே உண்மையில உடல வாழவிற் கலல, உயிர் வாழககைக்கு இனறியமையாத மொழி எதுவோ அஃதல்லவா மொழி எனபபடும? அநநிலையனறிக கான மயிலாடக கண டிருநத வானகோழி போலும, வடடமிடடு வாய்க்கொட்டோடு கைக்கொடடும கூடியொலிககத் திரியும மொழியெல்லாம மொழியாமோ? எனவே மேலேகூறிய உயிா அல்லது உளத திற்குப பண்பாட்டினைக கொடுககும மொழி எதுவென ஆராயின் அது அனறு, இன்று, எனறும தெனமொழியாய தமிழே எனபது வள்ளுவர் வாய்மொழியே வகுததுக காட்டும

இந நிலையாகிய நந்தமிழின நிலை கருதியல்லவா தமிழ விடுதூதுடையாரும தமிழை,

> "புததிகளுள் உண்ணப் படும்தேனேயென
> முததிக கனியே முழுமுதலே"

எனறும, பாரதியாரும,

> "தமிழ் மொழி போலினிதாவ தெஙகுங காணோம"
> "சொல்லி லுயாவு தமிழ்ச சொலலே"

என்றும் கூறுவாராயினர்.

இத்துணைய தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர் நிலை இன்றென்ன? அவர் கடன் யாது? எனபதே இக் கட் டுரையின நோக்கம் :

இன்று மொழியினலும், பொருளினலும் பலர்ககும அடி மைப் பட்டோம். நம் தூய அகத்தையே இழந்தோம். இன்று ஐயகோ என்றழத் தக்க நிலையிலானேம, அழகிழந்தோம; ஆண்மை யிழந்தோம்; அறிவோ டன்பிழநதோம், அரு ளிழந்தோம் இவையெல்லாம ஏன்? உணாவில்லாமையால்;

அரசியல் துணையில்லாமையால்; உண்மை யறியாமையா லல்லவா? இவையெல்லாம் நோக்கப் பாரதியார்,

"எந்நெஞ்சம் பொறாக்கு தில்லையே"

"இங்கிவர்க்கென துள்ளம் எரிவதே"

என்று கூறியதில் வியப்பொன்று மில்லையன்றோ? இதே தமிழ் மொழி இன்று வங்காளத்தார் கையிலோ? அமெரிக்கர் கையிலோ இருந்திருக்குமாயின் இதன் நிலையெல்லாம் கலையாக வல்லவா இருந்திருக்கும்? ஆயின் இன்று இதன் கலையெல்லாம் கொலையாக ஆகும் தன்மையினை யாரும் உணர்வாரில்லையா?

"கம்பனென்றொரு மானிடன் வாழ்ந்ததும்,
சேரன் தம்பி சிலம்பை யிசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை கண்டதும்
அன்ன யாவு மறிந்திலர் பாரதத்
தாங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர்
மற்றென்ன கூறியெங்ஙனுணர்த்துவேன்
இங்கிவர்க் கென்னுள்ளம் எரிவதே"

என்று கூறிய பாரதியார் மொழி இன்னும் இருக்கக் கண்டு என்னுள்ளமும் எரிகின்றதே என்று கூறவேண்டுமா? உண்மை யறியாத உலகத்தார்க்கு யார்தான் என்சொல்ல வியலும்? அவர் வாய்க்கு யார்தான் விலங்கிட முடியும்?

இன்று எல்லாத் தீண்டாமையும் ஒழிந்தது ஒருவாறு. ஆயின் ஆங்கிலம் பேசுவோர் உயர்ந்தவினம், அன்றித் தமிழ்ப் பேசுவோர் தாழ்ந்தவினம்; பட்டதாரி உயர்ந்தவினம், அன்றி அதுவொட்டாதாரி தாழ்ந்தவினம் என்ற தீண்டாமை இன்னும் ஒழிந்தபாடில்லை. அன்னார்க்கொன் றறிவுறுத்துகின்றேன்: அறிவுடைமை மொழியாலல்ல; மொழியில் கூறும் பொருளால், கருத்தால் என்பதனை. இதனை யுணர்வாராக இனியாயினும்.

உண்மையில் தமிழ்த்தாயின் ஒருவயிற்றுப் பிறந்து, உடன்பிறந்த தமிழரோடு வளர்ந்து, தமிழ்நாட்டுச் செஞ் சோற்றையுண்டு, தமிழ் மலையும், கடலும் யாறும் மட்டில்லாப் பொருளை உடலுக்கும், உளத்திற்குங் கொடுக்கவுண்டு, தமிழ்ப் புலவர் தேனினுமினிய கருத்தினைத் தாய்ப்பால்போலச் சுவைத் துண்டு தன்னிலை யுயர்ந்து பண்பாடடைந்த தமிழருங்கூட, ஐயோ! தமிழ், தமிழர் என்னின் அவர் வாய்க்கு எட்டிக்காயும், கண்ணிற்குப் பேயும், காதிற்குக் கழுதைக் கத்தலும், மூக்கிற்கு மூடை நாற்றமும், ஊற்றிற்குத் தீயுமென்றல்லவா நினைக்கின் றார்கள்? இஃதவரறியாமையா? அல்லது அவர் இயல்பா?

ஆங்கிலச் சொல்லையும், பிற சொல்லையும் அவ்வாறே பயன் படுத்தவேண்டும் பிறவெழுத்துக்களையும் இடையிடையே இணைக்கவேண்டும் என்பார் பலர். ஏன் வேண்டும்? தமிழ்ச் சொல்லும், எழுத்தும் போதாதா? ஆய்ந்து பார்ப்பின், தமிழ் நூற்களை ஆழ்ந்து கற்பின் அன்னார்க்கு உண்மை புலப்படும். சிலர் பிறமொழியில் உள்ள புதிதாய்க் கண்டுபிடித்த பொருளுக்கு அச்சொல்லையே தமிழிலும் அமைக்கவேண்டுமென்பர். ஆயின், எடுத்துக்காட்டாக ஆங்கிலேயரால் கண்டுபிடிக்கப்பட்ட பொருளின் சொல்லிற்குச் செர்மனி, சப்பான், சைனா, உருசியா முதலிய நாடுகளில் எச்சொல்லைப் பயன்படுத்துகிறார்கள் என்பதனை யுணர்வாராக! எனவே தமிழர்க்கு மட்டுமா இக் கட்டுப்பாடு?

சொல்லென்றால் பொருளிற்குக் காரணப் பெயராயல்லவா இருத்தல் வேண்டும்? அஃதல்லவா என்றும் மறவா திருக்கும்? இல்லையேல் சில நூற்றாண்டின் பின் சொல் சிதையுங்கால் அதன் நிலை மக்களிடையில் என்னாம்?

இன்னொரு சாரார், தமிழில் எழுத்து முந்நூறென்பர்; முந்நூற்றுத் தொண்ணூற்றொன்பதென்பர். இருநூற்றறுபத் தொன்பதென்பர், எனவே, கற்கவரியது என்பர். அவர்க்குக் கூறுகின்றேன், தமிழ் எழுத்துக்கள் முப்பதே என்று

மற்றுமொரு சாரார் திருக்குறள் முதலிய நூற்கள் கடுந் தமிழ் எனவே, எளிய தமிழில் பேசினால்தான் புரிந்துகொள்ள முடியும் அஃதாவது இயல்பான பேச்சு வழக்கிலுள்ள கலப்பு மொழி என்பர் ஆயின் உண்மை அதுவல்ல தமிழே இயற் சொற் சிறப்பினையுடைய செந்தமிழே கொடுந் தமிழ்தான் கலப்பும், திரிபுமுடையது. எனவே, நம் மனமும், அறிவுந் திரிந்ததேயொழிய தமிழ் திரியவில்லை. நாமே வரவரக் கீழ் நோக்கிச் செல்லுகின்றோம். ஆகவே, நாம் மீண்டும் உயர்நிலை யடையுங் காலமிது அரசியல் துணையினையும் இன்று பெற்றோம். அதுவும் பெயரளவில முதன்மொழி தமிழ் என்றில்லாதவாறு அமைப்பதே தமிழ்மாணவர் மற்றையாருடைய கடனும் இந் நிலையடைய நாம் என்செய்தல் வேண்டுமெனின்,

கூடியவரை நம்மாலியன்றவளவு தமிழைப் பிறமொழி (தமிழில் எளிய, இனிய சொல்லிருக்கும்போது) கலவாது, கொச்சைநடை நீக்கிப் பண்டைய நிலையுங் கலையும்போல பண் புடனே சிதையாது பேசப் பழகல் வேண்டும். முதலில் நகை யினை விளைக்கலாம். பின் அமைந்துவிடும். எல்லாம் பயிற்சி யைப் பொறுத்ததேயாம். நகைப்பாரின் நாவையறுத்துக் கசையாலல்ல, வசையாலடியுங்கள்.

பழஞ்சொல்லை அதன் பொருண்மையினை யறிந்து பேசல் நலம். பொருளற்ற சொல்லைப் புலத்தில் வைக்கவேண்டா. இன்னும், தமிழ்நூற்களையும், வெளியீட்டினையும் நல்லனவற்றை யும் நாமும், அவரும் நலனடையக் கற்றறிக. குறைபடப் பேசு வோரைத் திருத்துக.

இடைக்காலத் தேற்பட்டது ஓர் கொடுமை; அஃதாவது, தமிழ் நாட்டோர்கட்கும், கோவில்கட்கும் ஆரியப் பெயர் சூட்டல், அவ் ஆரியப்பெயரினை ஒழித்து அவைகட்கேற்ற தமிழ்ப்பெய ரைப் பொருளோடும், புலனோடும் அமைத்தல் வேண்டும். வழங்குதற்கு, அறிக்கைப் பலகையில் எழுதச்செய்க. இல்லை யேல், டிரிக்கனுமலை, மச்சுரா, டூட்டிகோரின், காலிகட், அம்பட் டன் பிரிட்ச எனப்பனபோலக் கூறின குடிகொள்ளும். தமிழ்க் கோவில்களில் பிறமந்திரமொழியினை நீக்கித் தமிழ்த் தேவாரம், திருவாசகம் பாடச்செய்தல் வேண்டும்.

இன்னொன்று சிறப்புடையது, நினைக்கத்தக்கது, உலகி லுயர்ந்த பெரியோர் பெயரைத் தெருக்களுக்கிட்டு வழங்கும் போது உணர்வழியாமல் இட்டழையுங்கள்! உலகில் வீணே நிலையாதுயர்ந்தார் பெயரையும் தமிழ்ப்பண்பாட்டால், பிறக் கென வாழும் பெற்றியால் நம இடங்களுக்கிட்டோம். ஆயின், நம் வள்ளுவர், வ. உ. சி, பாரதியார் பெயரை உலகில் எத்தனை வேறிடங்கட்குச் சூட்டியுள்ளார் என்று நான் உங்களிடம் கேட்கின்றேன். எனவே, நம்மை மதியாரை நாம் மதிக்காமல்— நம் தமிழ்ப் பெரியோர் பெயருக்குப் பின்னேயே மற்றையோர் என மனத்தமைக்க வேண்டும். அன்றியும் இவர்கள் போன்ற ஆன்றோர் பிறந்திறந்த நாளைப் பெருநாளாகக் கொண்டாடல் நமக்கடனாகக் கொள்ளல்வேண்டும்.

இறுதியாக யான் சொல்லுவது என்னையெனின்? கடிதத் தோடு மட்டுமல்ல, அரசியலில் எவ்வெழுத்தும் கூடியவரை தமிழிலமைக்க வழியமையுங்கள்; வீடுதோறும் சோறுங்கறியும் போல, குறளும், நாலடியும் மக்கள் மனக்கண்ணின் வலயிடமாக இருக்கட்டும்; இருந்தால் போதாது; கற்கவேண்டும்; கற்றால் போதாது அவ்வாறு ஒழுகவும், ஒழுகவுஞ் செய்யல்வேண்டும்; உண்மையறியாத ஊமையர்க்கு உள்ளத்தில் மெல்லக் குத்தித் தெள்ளிய தறிவிக்க. தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்க.

# வள்ளுவர் ஓர் உயிர்நூற்புலவர்[1]

[செல்லூர்க்கிழார் திரு செ. ரெ. இராமசாமிபிள்ளை]

*தோற்றுவாய்*

உலகிற் காணப்பெறும் உயிர்கள் பல்வேறு வகையின. அவை, கட்புலன் கொண்டும் காணவொண்ணாத நுண்ணுடல் பெற்றவையான தெள்ளுப்பூச்சி முதல் மலைபோன்ற பருவுடல் பெற்றவையான யானை யீறாக எண்ணிறந்தன. இவைகளின் குணஞ்செயல்களும் அளப்பிடற்கரியன. ஆ! இத்தகைய உயிரீட்டங்களைப் படைத்துக் காத் தழிக்கின்ற இறைவன் அளப் பரும் பேராற்றல்தான் என்னே! இவைகள் உடற்பருமைக் கேற்றவாறு வலியும் திறலும் அறிவும் பெருக்கமுற்றிருக்கின்றன. இதனானே ஆண்டவன் இயற்கைப்பண்பை அளந்துகூறிய பண்டைக்கால வண்டமிழ்ப் புலவர்பெருமான் மூன்றுறை யரையனார் 'பெரியதன் ஆவி பெரிது' என்று உவமங் காட்டிக் கூறுவாராயினர்.

இத்தகைய பல்வகைப்பண்பும் அறிவுங்கொண்டு இலகுறுகின்ற உயிரினங்களை ஆயின், இறுமபூது பயக்கின்றதன்றோ? எந்த உயிரும் தமக்கென ஒவ்வொரு வகையான உணவுகளை உட்கொண்டே உயிர்வாழ்கின்றன. மண் கல் முதலியவற்றை உண்ணாது தானிய வகைகளையே பொறுக்கியெடுத்து உண்கின்றன. ஊன்றி நோக்கினால், எவ்வகை உயிர்களும் உயிர் கலவாத—உயிர்ப்பொருளல்லாத பிறவற்றை உண்கின்றில. இன்னும் சிறிது நுணுகி ஆய்ந்தால் சிற்றுயிர்களைப் பேருயிர் அடித்துக் கொன்றுண்பதாகவே இருக்கின்றது. இக்கருத்தை நிலைக் களனாகக்கொண்டே, 'சின்ன மீனெல்லாம் பெரிய மீனுக்கிரை' என்னும் பழமொழியும் எழுவதாயிற்று. எனவே, உலக உயிர்கள் ஒவ்வோருயிரையும்—அதனினும் வன்மைபெற்ற உயிர்கள் கொன்றுண்பதாகவே இருக்கின்றது. இஃதே இயற்கை வகுத்த விதிபோலும்!

இவ்வாறாக உண்டு உயிர்வாழும் உயிர்களின் இயற்கைத் தன்மைகளை நன்கு கூர்த்தாராய்ந்து பண்டைக்கால அறிவியற் புலவர்கள், அவற்றுள் கொடியன, நல்லன என இருபாற் படுத்து வகுத்து அவையிற்றுள்ளும் அறிவான் உயர்ந்தன தாழ்ந்தனவற்றையும் நுணங்கி ஆய்ந்து அவைகளை ஓறிவு முதல் ஆறறிவுவரை பகுத்துரைப்பாராயினர்.

---

* Valluvar a zoologist.

### அறிவு இன்னதென்பது

அறிவென்பதென்னை? ஒன்றன் தன்மையை இன்னதெனப் பிறழாது உணர்வது. அவ்வாறுணர்தற்குத் தத்தம் உடலிற் பொறியும் அப்பொறிகளிடத்து அவ்வவற்றிற்கேற்ற உணர்வும் பொருந்தியிருக்கின்றன. நம் உடலை எடுத்துக் கொள்வோம். ஒவ்வொன்றையும் உணர்வதற்கென்றே பொறிகளும் அவைகளை ஊடுருவி நின்ற புலன்களும் அமைந்திருக்கின்றன. நாம் ஓர் பூங்காவிற்குப் போந்து அழகிய மலர்வகைகளின் செந்நிறம் வெண்ணிறம் முதலிய பன்னிறங்களையும் அதன் மலர்ச்சி அமைப்பு செவ்வி முதலிய யாவையும் கண்டு கண்டு இன்புறுகின்றோமெனின், அவைகளைக் காண்டற்குத் துணையாக அமைந்த கருவி யாது? கண்ணும் அதனுள் அமைந்துள்ள புலனுமன்றோ! கட்பொறி மட்டும் இருந்து புலனற்ற குருட்டுக் கண்ணாக இருப்பின் அவைகளைக் காணல் ஒல்லுமோ? ஒல்லாதன்றே. ஆகவே, இவ்வாறு அறியும் இயல்பு கொண்டே உயிர்வகைகளை மேலுயிர் கீழுயிர் எனப் பாகுபடுத்துணர்த்துவாராயினர், நந்தமிழ்ச் சான்றோர். வானொலிப் பெட்டியில் எவ்வெவ்வூர் பொறித்திருக்கின்றனவோ அவ்விடத்தில் அதன் குமிழைத் திருப்பினால் அவ்வவ்விடங்களில் நிகழும் அவ்வவ் நிகழ்ச்சிகளை அவ்வவ் விடங்களில் பற்றுக்கோடாக நின்று உணர்த்துவதுபோலவே பொறிகளும்.

### தொல்காப்பியர் வகுத்த உயிர்வகைகள்

இற்றைக்கு ஏறக்குறைய ஐயாயிர யாண்டுகட்கு முற்பட்டுத் தோன்றிய ஆசிரியர் தொல்காப்பியனார், தம் கூர்த்த மதி வன்மையால் உயிர்வகைகளை உற்றாய்ந்து அவைகள் ஒன்று முதல் ஆறுவரையுள்ள அறிவுள்ளனவேயென அறுதியிடுவாராயினர். அவர் வகுத்த முறைமை,

‘ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே.’

என்னும் மரபியல் நூற்பாவால் தெளியப்படும்.

இதனால் ஒவ்வொன்றையும் உற்றுணர்தற்கு உடலின் தீண்டுதல் அறிவும் நாவின் சுவையறிவும் மூக்கின் மோப்ப

வறிவும் கண்ணின் காண்டலறிவும் காதின் கேட்டலறிவும் மனத்தின் ஆயுமறிவும் என்னும் அறுவகை அறிவும் உடையன வற்றுக்குள் அமைந்தனவே நாம் காணப்பெறும் எவ்வகை உயிர் களும் எனக் கொள்ளக் கிடக்கின்றது. இவ்வறிவுகளின் தன்மைகளினால்தான் உயிர்வகைகள் படிப்படியாக உயர்வுடை யனவாகக் கொள்ளப்படுகின்றது. இவைகளுள் புல், மரம், செடி, கொடி முதலியன நாம் அவைகளைத் தீண்டினால் அத் தொடுதல் ஒன்றே அறியும் அறிவினவாகுமெனப் பலவாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே கூர்த்தறிந்து உரைத்ததை அண்மை யில் இருந்து மறைந்த அறிஞர் ஜெகதீச சந்திரபோசு என்பவர் செடி கொடிகள் தொட்டால்மட்டும் உணரும் தன்மையைத் தாம் அமைத்த கண்ணாடிக் கருவிகளின் வழியாக நாம் காணு மாறு உணர்த்திய நிகழ்ச்சி உலகறிந்த உண்மையாகும்.

தொட்டாற்சுருங்கி யென்னும் ஒருவகைப் பூண்டு நாம் அதனைத் தொட்டால் உடனே தன் இலைகளைச் சுருக்கி மூடிக் கொள்கின்றது. இதிலிருந்து தொட்டால் உணரும் அவையிற் றின் அறிவு நன்கு புலனாகின்றதன்றோ? நத்தை, அட்டை, நந்து (உமுரி) என்பவைகள் இத்தொடுதல் அறிவோடு தம் வயிற்றை நிரப்புதற்கு நாவால் சுவைத்துணரும் தன்மையதான அறிவொன்றுடன் ஈரறிவுடையனவாகும். எறும்பு கறையான் போன்றவை மேற்கூறிய அறிவிரண்டுடன் மூக்கால் மோந்து அறியும் அறிவுஞ்சேர மூவறிவுடையனவாகும். நாம் ஓர் உணவுப் பொருளைக் கண்ணுக்குத் தெரியாத மறைவான இடத்தில் பூட்டி வைத்தாலும் அவை தம் மோப்ப உணர்ச்சியாலன்றோ கண்டுணர்ந்து அவ்விடத்திற்கு இடுக்கு வழியாகச்சென்று அதனை உண்கின்றன. கண்ணென்னும் புலன்கொண்டறிவ தில்லையன்றோ? தும்பி, வண்டு, தட்டான் முதலியவைகள் மேற்கூறிய அறிவு மூன்றுடன் கண்ணறிவு ஒன்று கூட நாலறி வுடையவாகும். பறவைகள் நாற்கால்விலங்குகள் மக்கள் முதலியன மேற்போந்த அறிவு நான்குடன் காதால் உணரும் அறிவு ஒன்றுடன் கூட்டி ஐயறிவுடைய உயிர்களாகும். இவ் வைந்தறிவுயிர்களே எங்கும் பல்கிக் கங்குகரையற்றுக் கிடக்கின் றன. இவ் ஐவகை அறிவுக்கு மேற்பட்ட உணர்வே, மனவுணர்வு; மனத்தாற் பகுத்து அறிவது. இம் மனவுணர்வுக்குத் தனியாக் வெளிக்கண்டுணரும் பொறி ஒன்றுமில்லை. வெளியே புலனாகாது தான் அகத்தே உருவற்று இருக்கும் அறிவே மன அறிவு.

**மன அறிவின் மாண்பு**

இவ்வுலகிடையே கட்புலன்கொண்டு காணப்பெறும் வியத் தகு மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், மின்பொறி வண்டி

கள், வானூர்திகள், நீராவி நாவாய்கள், பல்வகை வியத்தகு பொறிகள், வானொலிப் பெட்டிகள், தொலைபேசிகள் ஆகிய எண்ணிலடங்காத பொருள்களும், காதுணர்வுகொண்டு கேட்கப் பெறும் இசைக்கருவிகள் முதலியனவும் மற்ற உணர்வுகளுக்குப் புலனாகும் பிற பொருள்களுமாகும்.

ஒருவன் ஓர் ஓவியத்தைக் காவியத்தைத் ஆக்க முற்படுவானானால் அவற்கு முன்னரே அவைகள் அகத்தில் நுண்ணுருவாகியனவே பின்னர் வெளியே பருவுருவமாக ஆக்கப்பெறுகின்றன. ஆகவே, ஒன்றைத் தொட்டால் உணரும் அறிவினும், பட்டால் உணரும் நாவினும், ஒன்று எதிர்ப்பட்டால் காணும் கண்ணினும், ஒன்று ஓசையாக வந்தால் கேட்கும் காதினும், ஒன்றும் உறாமல் பற்றுக்கோடில்லாமல் மனத்தினின்றெழுதரும் உணர்வு மற்றவற்றினும் உயர்ந்ததாகின்றது. மனவுணர்வு, மரஞ்செடி கொடி முதல் எல்லாவகை உயிர்கட்கும் உண்டு. அவ்வுணர்வு, மக்களின் மனவுணர்வளவு விரிந்து வளரவில்லை. சில வுயிர்கட்கு அருமபியவளவில் நின்றுவிடுகின்றன, சில வுயிர்கட்கு இன்னுஞ் சிறிது பேரளவினதாகி நின்றுவிடுகின்றன, இவ்வாறே பற்பல வுயிர்கட்கும் பொருத்திக்கொண்டு பார்த்துத் தெளியலாம். இதனையே வள்ளுவர்,

> " எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்றார்

குளவியென்னும் ஒருவகைப் பறக்கும் இனம், தாம் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தற்கு எவ்வளவு பாடுபடுகின்றது தன் வாயால் ஈரமண்ணைக் கௌவிக் கொணர்ந்து கூடமைத்து தம் இனத்தைப் பெருக்குகின்றது. குஞ்சுகளின் உணவுக்காகப் பசசைப் புழுக்களைக் கொண்டுவந்து கூட்டினுள் அடைத்து வைத்து ஊட்டுகின்றது. அக் குஞ்சுகள் பறக்கும் பருவம் வந்தவுடன் அவைகளைப் பறக்கச் செய்து நன்கு பறந்து செல்லத் தகுதிபெற்றனவென அறிந்தவுடன் அவைகளை விட்டு விட்டு அக் குஞ்சுகளிடத்துச் சிறிதும் பற்றின்றிச் சென்றுவிடுகின்றது. இவ்வாறே ஏனைய உயிர்களான பறவைகள், விலங்குகள் முதலியன யாவற்றின் பண்பு செயல்களை ஈண்டு விரித்தெழுத முற்படின் இக் கட்டுரை விரியும். ஆகலான், குறித்ததன் மேற்செலவாம்.

ஈங்கு எடுத்துக் காட்டிய ஏதுக்களினால் பறவை, விலங்குகள் முதலியவற்றின் மனம், குறிப்பிட்ட ஓரளவோடு விரிவடையாமல் நின்றுவிடுகின்றன. மக்கள், இவைகளின் மனநிலையை

விட விரிந்த மனநிலையை - உயர்ந்த மனநிலையை - உடையராக விளங்குதலால், உயர்வகுப்பில் வைத்து அறிஞர் கூறுகின்றனர். ஒருவர் மனைவி, மக்கள் இறந்துபோக நேரின், அவரை நினைந்து நினைந்து எத்துணைக் காலம் வருந்துகின்றனர் அழுகின்றனர்; அவரைப்பற்றிய நினைவுநாளையும் குறித்துவைத்துக் கொண்டன்றோ கொண்டாடுகின்றனர்! இத்தன்மை பிற அஃறிணை உயிர்களிடத்து உண்டா? இல்லையன்றோ? இஃதொன்றே மக்களின் விரிந்த மனநிலையை யுணர்த்தப் போதிய சான்றும். பறவைகளில் காக்கைகளிடத்துச் சிறிதளவு காணக்கிடக்கின்றது. அவை தம் இனத்தில் ஒன்று இறந்துபோனால் ஒன்று கூடிக்கொண்டு இரைகூடத் தேடாமல் கதறுகின்றன, அதை மறைவில் போட்டுவிட்டால் கத்தாமல் போய்விடுகின்றன; இது மக்கள் மனநிலையினும் மேம்பட்டதாயினும் மனப்பண்பு விரிவடையாமல் ஓரளவோடு நிற்பதையே குறிக்கின்றது. இத்தன்மை விலங்குகளிடத்தே சிறிதும் இல்லை. இவ்வாறே ஒவ்வோருயிர்ப் பண்புகளையும் ஆய்ந்துகொண்டே போனால் புலனாகின்றன. ஆனால், வடிவினால் மக்களாக இருக்கலாம். செயலினால், அறிவினால் அவர்களை அளந்துகாண முற்பட்டால், அவர் மரமாக இருக்கின்றனர், நத்தையாக ஊர்கின்றனர்; பறவையாகப் பறக்கின்றனர்; விலங்காகத் திரிகின்றனர்; இந்த முறையில் துணிந்தாராய்ந்து மக்கட்பண்பு இவையெனக்கண்டு அறிவுறுத்தியவரே திருவள்ளுவர். இவர் ஒவ்வோர் உயிர்களின் தன்மைகளையும் நன்கு ஆய்ந்து தெளிந்து, அத் தெளிவை மக்களுடம்பு பெற்றிருந்தும், அவ் வுடற்பொறைக்கேற்றவாறு அறிவுசாலாது திரிதரும் மாக்கட்கிரங்கி ஆங்காங்கே இவர்தம் திருக்குறள் ஞாயிற்றொளி வட்டத்தில் வகுத்து வகுத்து விளக்கிக் காட்டுவாராயினர். அவரவர் மனநிலைக்கேற்ற பெற்றியாக மரத்தொடு சார்த்தியும் விலங்கொடு பொருத்தியும், இவ்விருபெரு வகுப்பினுஞ் சேர்க்காது தனிப்பகுப்பாக இருத்தலை விளக்கித் தெருட்டியும் காட்டுகின்ற புலவர் பெருமகனார் இவர் ஒருவரே யென்பது அவர்தம் அறநூலை ஊன்றிப் பயில்வார்க்கு நன்கு விளக்கமாம்

இவர்தம் அறநூலில் மக்களுடம்பு பெற்றார் மக்களாக வாழ்தற்கு வேண்டும் அறநெறிகளை வகுத்தும் தொகுத்தும் விரித்தும் காட்டி விதிவிலக்குகள் தந்துதவியருளினர்.

ஓரறிவுயிர்ப் பண்பு

இவர் ஆய்ந்து கண்ட உயிர்வகைகளுள் ஓரறிவுயிர்களாகப் புல்லும் பனையும் தினையும் கொடியும் செடியும் மரமும் பிறவுமாம். ஐயறிவுயிர்களாக யானையும் புலியும் நரியும் பரியும் முதலையும் ஆவும் கொக்கும் முதலிய பலவுமாம். இவைகளோடு

மக்கள் மாக்கள் பேய் இவைகளையும் இன்னின்ன தன்மையன வென்று வரையறுத்துரைப்பதுடன் வழிதெரிந்து நடக்க - மக்களாக வாழ - இருளதீர்ந்த கண்கொடுத்த பெரியாருமாவர்.

இவர் எடுத்து விளக்கும் பொருள்களைக் குறும்பாவான் அமைத்து விரிந்த பொருள்களை உள்ளடக்கிக் காட்டும் மதுகையினர். இதாதம பா சுருஙகச் சொல்லி விளஙகவைக்கும பெற்றியன. இவர் வகுத்துக்கொண்ட பொருள்கள அறம பொருள் இன்பம என்னும மூவ்வகையின ; இவை மக்களாகப் பிறந்தார்க்கு இன்றியமையாதன இவற்றை ஆசிரியர் தொல்காப்பியனர்,

'இன்பமும பொருளும அறனும்என் றுஙகு
அனபொடு புணாந்த ஐந்திணை மருஙகு'

என நூற்பாவோதி முதற்கண் இன்பத்தையும இறுதிக்கண் அறத்தையும வகுத்துரைபப, இவர முறைகளை மாற்றிக்கொண்டதெனனையெனின் ? இவர் உயிரவகைகளை அறிவுநோக்கிப் பகுத்துணர்த்தும பேராசிரியராகலான, மக்களாக வாழ்வு நடாத்தத்தக்க மககளுக்கு அறமே முன்னிற்கற்பாலது என முன்னிறுத்தி, அவ்வறஞ் செயதற்கும உலகியல வாழ்க்கையை மேற்கோடற்கும் துணைக்கருவியாகவுள்ள பொருளை இடையில்வைத்தமைத்து, இமமை இன்பம் ஒன்றையே பயபபதாய இன்பத்தை இறுதிக்கண் வைத்துக் கூறியருளினா.

இவர் முதற்கண் உயிர்வகைகளுள் ஓரறிவுயிரான புல்லினை எடுத்தாண்டுள்ளனா. புல்: புல்லியது, சிறியது என்னும் பொருளது. சிறியதாவது மிக எளிமையானது ; அஃதாவது தரையுடன் தரையாய் ஒட்டிபபடர்ந்து கிடககும தன்மையது. இது நிலையியறபொருளாய் ஊற்றுணாவினைமட்டும அறியுந்தகையது, இதனைத தொலலர்சிரியரான தொல்காப்பியனர்,

'புல்லும மரனும் ஓரறி வினவே
பிறவும உளவே அக்கிளைப் பிறப்பே'

என மரபியலில் இதன் இயற்கையை விளக்கியருளினர்.

இவர் இப் புல்லினை வான்சிறப்பென்னும் அதிகாரத்தில்,

'விசும்பில் துளிவீழின அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண பரிது'

என்றார்.

(தொடரும்).

# கலையும் பண்பாடும்[1]

[வித்துவான் பண்டிதர், திரு கா. பொ. இரத்தினம் M.A., B.O.L.]

நம் முன்னோர் உயர்ந்த கொள்கையும், பரந்த நோக்கமும், சிறந்த நாகரிகமும் உடையவர்களாய் வாழ்ந்தார்கள். அவர்கள் நமக்கு அறிவுறுத்திய "யாதும் ஊரே யாவரும் கேளிர்," 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்,' 'முயற்சி திருவினையாக்கும்,' 'பெருமைக்கும் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்' முதலிய சிறந்த பொன்மொழிகளைக் கூறிக் கூறி, யாம் பெருமிதம் அடைகின்றோம். இக்கருத்துக்களை உடையவர்களாய், அக்காலத்தில் வாழ்ந்த பிறநாட்டு மக்களிலும் பார்க்கச் சிறந்துயர்ந்த வாழ்க்கையினை நடத்தியதற்குக் காரணம் அவர்களுடைய பண்பாடே ஆகும்.

இந்த உலகத்தை நடத்தும் சக்திகளை இரண்டாகக் கூறலாம். ஒன்று அறிவு, மற்றது செல்வம். இந்த இரண்டும் பண்பாட்டுடன் சேராதியங்காவிடிற் பயனற்றவை என்பதை நம் முன்னோர் நன்கு உணர்ந்தார்கள். பண்பாடில்லாதவர்களுடைய நுண்ணறிவும், செல்வமும் பயனற்றவை என்று ஒதுக்கி வைக்கிறது தமிழ்மறை என நாம் போற்றும் திருக்குறள். கூரிய - நுண்ணிய - அறிவை அளந்தறிதற்கு இக்காலத்தில் அகநூலார் பல முறைகளைக் கையாளுகிறார்கள். அரம் போன்ற கூர்மையான அறிவையுடையவர்கள் கூடப் பண்பாடற்றவர்கள் எனின், மரங்களைப் போன்றவர்கள் என வள்ளுவர் பெருமான் கூறுகிறார்.

'அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்'

என்பது அவர்தம் வாய்மொழி

இந்த உலகவாழ்வுக்குச் செல்வம் இன்றியமையாதது. "இல்லோர் வாழ்வு இரத்தலினும் இழிந்த"தென நம் முன்னோர் கூறியுள்ளனர். "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை; பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது இல்லை பொருள்" என்பன வள்ளுவர்தம் கருத்துக்கள். இத்தகைய செல்வத்தை அளவின்றி—அடுக்கிய கோடியாக—வைத்திருந்தாலும் அதை வைத்திருப்பவன் பண்பாடற்றவனாயின் அப்பெருஞ் செல்வத்தால் ஒரு பயனுமில்லை எனத் தமிழ்மறை கூறுகிறது. பால் எவ்வாறு அதனை வைத்திருக்கும் பாத்திரத்தின் அழுக்கினாற் கெட்டுப்போகுமோ அவ்வாறே பண்பாடில்லா

1. இலங்கை வானொலித் தமிழ்க்கலை மன்றத்தின் முத்தமிழ்விழாவில் தலைமை தாங்கி நிகழ்த்திய விரிவுரை.

தவனுடைய பெருஞ் செல்வம் கெட்டுவிடும் என்பதைப் பின் வரும் திருக்குறள் கூறுகிறது.

'பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.'

இவ்வாறு, அறிவு செல்வம் எனும் இரு மாபெருஞ் சத்திகளைக் கூடப் பயனற்றனவாக்கும் பண்பாட்டினைப் பெறுதற்குக் கலைநுகர்ச்சி மிக இன்றியமையாதது. பல்வகைப்பட்ட கலைகளுள்ளும் அழகியற்கலை என்ப போற்றப்படும் நுண்கலைகளே சிறந்தன. இவற்றுள்ளும், மொழியுடன் இணைந்துள்ள இலக்கியம் இசை நாடகம் எனபனவே தனிச் சிறப்புடையன. மொழி எவ்வாறு விலங்கினின்று மனிதனைப் பிரித்துயாத்துகிறதோ, அவ்வாறே இக் கலைகளின் நுகர்ச்சி அதனைப் பெற்றவர்களை ஏனைய மக்களிலிருந்து பிரித்துயாத்துகிறது. மக்கள் மாக்களாய் வாழாது பண்பாடுடையவர்களாய் வாழ்தற்கு இக்கலைகள் வேண்டியன என்பதை உணர்ந்தே நம் முன்னோர் இவற்றை நம் தமிழ் மொழியுடன் இணைத்து முத்தமிழ் என வழங்கினர். இயல், இசை, நாடகம் என்பனவே முத்தமிழ்களாகும். இவற்றை நம் முன்னோர் நன்கு போற்றிவளர்த்தனர், இக்கலைகளிற் றேர்ந்த அறிஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர்.

புறநானூறு முதலிய பழந்தமிழ்நூல்களிற் பல பகுதிகள் முடியுடை மூவேந்தரும், குறுநிலமன்னரும், வள்ளல்களும் புலவர்களையும், பாணர் விறலியர் கூத்தர் முதலிய கலைஞர்களையும் ஆதரித்துச் சிறப்புச்செய்த செய்திகளைக் கூறுகின்றனர். புலவர் பாடும் புகழை உடையவர்களாக வாழ்தலையே, வீரம் நிறைந்த அரசர்களும் தாழ்விலாச் செல்வர்களும் தங்குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தனர் அரசர்களுடைய நண்பர்களாகவும், அமைச்சர்களாகவும், தூதர்களாகவும், அறிவுரை கூறுவோராகவும் புலவர்கள் அக்காலத்திலே திகழ்ந்தனர். புலவர்களுக்கு நாடு நகர், பொன் மணி, யானை குதிரை முதலியவற்றையே அன்றித் தம் அரசையும், பெறுதற்கரும் பொருள்களையும் அரசர்கள் வழங்கினர் தலை கொடுத்த குமணனையும் கலம்பகத்துக்கு உயிர் கொடுத்த நந்தியையும் அறியார் உளரோ?

இசை நாடகக் கலைஞர்களும் அக்காலத்திற் பொருள் பல பெற்று முட்டின்றி வாழ்ந்தனர். பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை முதலிய நூல்களின் அமைப்பு முறையே இக்கலைஞர்களுடைய பெருமையையும் தமிழ்ச் சமுதாயம் அவர்களுக்களித்த

மதிப்பையும் நமக்கு நன்கு புலப்படுத்தத் தக்கது. பாணர் கூத்தர் முதலியோருடைய வறுமையை நீக்குதலே அரசாக ளுடைய சிறந்த கடமையென்பப் புலவர்கள்பலர் பாடியுள்ளனர். பகைவர்களுடைய நாட்டை வெல்லுதற்கு முன்னரே அந்நாட் டைப் பாணர்களுக்குக் கொடுக்கும் பெருஞ்செயலை,

> 'ஒன்னா ஆரெயில் அவர்கட்டாகவும் நுமதெனப்
> பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்.'

எனும் புறநானூற்றடிகள் குறிப்பிடுகின்றன. 'வயிரியர் இன்மை தீர்க்கும் குடிப்பிறந்தோய்' என ஓரரசனைப் பாராட்டுகிறார் புலவர் ஒருவர். நள்ளி என்ற வள்ளல் பாணர்களுக்கு அள வின்றிப் பொருள் கொடுத்தான். அப்பொருளைப் பெற்றவுடன் அவர்கள் தலைகீழாக நடக்கத் தொடங்கிவிட்டனர். இசைமரபை மறந்து காலையிலே பாடவேண்டிய பண்ணை மாலையிலும் மாலை யிலே பாடவேண்டிய பண்ணைக் காலையிலும் பாடினர். இதற்குக் காரணம் 'உனது வண்மையே' என்று நள்ளியை விளித்து வன் பரணர் எனும் புலவர் பாடும் பாடலைக் கேளுங்கள்.

> 'நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
> மாலை மருதம் பண்ணிக் காலைக்
> கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
> வரவெமர் மறந்தனர் அதுநீ
> புரவுக்கடன் பூண்ட வண்மை யானே.'

தமிழ்நாட்டிலே பாணர்களுக்கு இருந்த பெரும் மதிப்பி னாலேயே புலவர்களுங்கூடத் தம்மைப் பாணர்களாக வைத்துப் பாடிப் பெருமிதம் அடைந்தனர். வாளினாலும் தாளினாலும் பெரும் போரினாலும் விடா முயற்சியினாலும் பெற முடியாத வற்றைப் பாடலினாலும் ஆடலினாலும் பெறத்தக்க நிலைமை தமிழ் நாட்டிலிருந்ததெனின், இசைநாடகக்கலைகளின் ஆற்றலையும் அவற்றிற்குத் தமிழினம் அளித்த பெருஞ்சிறப்பையும் அளவிட் டுரைக்க முடியுமா?

பாரி என்னும் வள்ளல்மேற் பகைகொண்டு அவனுடைய நாட்டை முடியுடை மூவேந்தரும் முற்றுகையிட்டனர். பன்னாள் முயன்றும் பாரியை வெல்ல முடியவில்லை. பகைவராகிய அம் மூவேந்தர்களையும் ஆடிப் பாடி வந்தால் பாரியிடம் நாடும் குன் றும் எளிதிற் பெறலாம் என்று கபிலர்பெருமான் பாடினார்.

> 'தாளிற் கொள்ளலிர் வாளிற் றரலன்
> யானறி குவனது கொள்ளு மாறே
> சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி

விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே'

என்பது அவருடைய பாடலின் ஒரு பகுதி.

இக்கலைகளின் பெருமையினை நன்குணர்ந்தே இடைக்காலத்திலே கோவில்களிலும் இவற்றை வளர்த்தனர் சோழ அரசர்களுடைய ஆட்சிக்காலத்தில் கோயில்கள்பல, இலக்கியம் இசை நாடகம் என்பவற்றை வளர்த்த கலைக்கூடங்களாயின

இவ்வாறு ஆதரவுபெற்றுச் சிறப்பாக வளர்ந்து வந்த இக்கலைகள் இருந்த இடம் தெரியாமல் மறையும் நிலைமையை அடைந்து விட்டன. இவற்றை நன்கு வளர்க்க வேண்டுமெனும் ஆர்வமும் முயற்சியும் இப்பொழுது காணப்படுகின்றன எனினும் வேண்டிய அளவிற்கு உண்மையான வழியில் நாம் முயல்கிறோம் என்று கூறல் முடியாது.

கொழும்புநகருக்கு வந்த ஒரு தமிழ்ப்பெரியாருடன் சில நாட்களுக்கு முன்பு உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது இப் பெரியார் ஒரு தமிழ்ப்பத்திரிகையை நடத்துகிறார்; சமுதாயத் தொண்டுகளிலும் ஈடுபட்டுள்ளார், பல இடங்களுக்குஞ் சென்று சொற்பொழிவுகளும் ஆற்றிவருகிறார். வடமொழிப் பயிற்சியும் உடையவர். இவருடன் தமிழர்களுடைய வரலாறு, பண்பாடு, இலக்கியச்செல்வம் முதலியவற்றைப் பற்றிக் கலந்துரையாடினேன் சங்கநூல்களைப்பற்றிப் பேசும்போது "அவற்றிலே சமண சமயக் கருத்துக்கள் நிறையவிருக்கின்றன" என்றார். உடனே "புறநானூற்றைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்" என்றேன். "புறநானூறு என்றால் என்ன" என்று அவர் கேட்டார். தமிழுக்கும் தமிழினத்துக்கும் தொண்டு செய்யும் அறிஞர்களின் தமிழிலக்கிய அறிவு இவ்வாறிருக்கின்றதெனின் தமிழினைப் படியாது ஆங்கிலத்திற் படித்த தமிழ்மக்களின் தமிழிலக்கிய அறிவினைப் பற்றிக் கூறவும்வேண்டுமா?

தமிழிசை என்றால் என்ன என்று கேட்கும் அன்பர்களும் உளர். தெலுங்குப்பாடல்களுக்கும் தமிழ்ப்பாடல்களுக்கும் வேறுபாடு தெரியாத பெற்றோர்களும் இக் கொழும்புமாநகரில் உளர். தெலுங்குப்பாடல்களை விட்டுவிட்டால் தமிழர்கள் எவ்வாறு இசை பயில முடியும் என்று கூறுகிறவர்களும் இல்லாமல் இல்லை மழலைச்சொல் மாறாத நம் பசிளங் குழந்தைகளுக்குப் பொருள்விளங்காத பிறமொழிப்பாடல்களைக் கற்பித்து அவர்களுடைய ஆர்வத்தைக் கொன்றுவிடுகிறோம். பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள் சில நாட்களுக்கு முன்

இந்த மேடையில் நின்று பேசியபொழுது நம் குழந்தைகளுக்குத் தொடக்கத்திலேயே தாய்மொழிப் பாடல்களைக் கற்பிக்க வேண்டுமென்று கூறினார். அவர்தம் அறிவுரையையும் பொருட்படுத்தாமல் பிறமொழிப் பாடல்களைக் கற்பிக்கும் இந்தக் குருட்டுப்பழக்கம் என்றுதான் நீங்குமோ? இக் கொழும்பு மாநகரில் இசைக்கலை நல்லமுறையிற் கற்பிக்கப்படவில்லை என்பதை யாவரும் அறிவர். இசைக்கலை சிறந்தோங்க வேண்டுமெனின் நமது பல்கலைக்கழகத்திலே தமிழிசையும் ஒரு பாடமாகக் கொள்ளப்படல் வேண்டும், தமிழிசைக்கல்லூரி ஒன்று நிறுவப்படல் வேண்டும்.

---

## இளமாணாக்கன்[1]

[நெல்லை திரு. க. சுப்பிரமணியன்]

குறளடி வஞ்சிப்பா

நண் பகற் காலை நா வறள
உண் பதற் கென்றுஞ் சோற்றுணவு
கொண்டு வருதல் இன்மையின் ஐய!
தண்ணீர் பருக வலித்தன மால,
பிற்பகல் முழுதுங் கலை பயில
எற் சிறு மேனி இளைத்தனன் மால;
உளந் தளர்ந்த நிலை யெண்ணி
வளங் காணாத வன் வழியே
நடுங் கனா தரு கொடு வேடர்
கடுகடுக்கு மவர் நோக் கஞ்சிச்
சில சில நண்பர் ஒரு சேர
மெல்லமெல்ல வெம்மூர் நண்ணுவ மால்;
என்றனன் அருமை மாணவன் ஒருவன்!
ஆழ்ந்த சிந்தனை ஆட் கொள்ள
காழ்ச் சிந்தையுங் கசிந்துருகும்
இள மாணாக்கன் எளியனல்; அவன்
அனையர்,
இளமையும் ஆற்றலும் இழந்தனர் தளர
வளர்ந்தரு நாட்டின் வருநாள் மக்கள்
உரனிலர் கழிய, உடலுளம்
மாணுட் கரையான் புரைகுவர் எனவே!

---

1. ஐந்துகல் தொலைவிலிருந்து நாளும் நடந்துவந்து கல்விகற்கும் எம் இளமாணவன் ஒருவன் நிலையினைக் கிரங்கிப் பாடியது.

# தமிழகத்தில் உழவு

[புலவர் திரு. கா கோவிந்தன், எம் ஏ., திருவத்திபுரம]

இன்றைய உலகம பலவகையானும வளாந்துளது; புதிய புதிய கணடுபிடிப்புககள, உலக வளாசசிக்குப் பெரிதும துணை புரிநதன, துணை புரிகினறன கறகாலததில இருநத மனிதன, அணுவாறறல காலததிற்கு முன்னேறிவிட்டான எணணெய், நீராவி, மினஆறறல முதலியன, அவன உழைபபைப பெரிதும் குறைததுவிட்டன; தொழிலவளாசசிக்குப பெரிதும துணை புரிகினறன, என்றாலும, உலகததின அடிபபடைத தத்துவம என்றுமபோல ஒன்றாகவே உளது, புததம புதிய கணடு பிடிப புக்கள, 'மக்கள யாக்கை உணவின் பிணடம' எனற கொள கையை மாற்றி அமைதது விடவிலலை, 'ஒரு நாள உணவை ஒழி எனறால ஒழியாய், இருநாளைககு ஏல எனறால, ஏலாய, ஒரு நாளும என் நோவு அறியாய்; இடும்பை கூர எனவயிறே! உன் னோடு வாழ்தல அரிது' என்ற பாட்டிறகு எதிாபபாட்டுப் பாடும் நிலைமையை உண்டாக்கி விடவில்லை, 'கலலைததான, மண்ணைத் தான, காய்சசித்தான குடிககததான் கற்பிததானு?' எனறவர் வேட்கையை நிறைவேறறவுமிலலை

இடைக்கால மனிதன், உணவையும, அதறகுக காரணமாய உழவையும் குறைததே மதிபபிட்டான, ஏன, அறவே மறநதும விட்டான், ஆனால், அண்மையில நிகழநத உலகப பெருமபோா களும், அவறறின் பின விளைவுகளும, மனிதனை, உணவு, உழவு இவறறின் இன்றியமையாமையினை நனகு உணாச செயது விட டன; மககள இனறு பெறற இவ்வுணாவைத் தமிழாகள, பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே உணாநதிருநதனா, அககாலததிய நிலததின் தனமை, அதன அளவு, உழவுமுறை, அதறகு இனறியமையா நீா தரு வழி வகைகள, அந்நிலததின விளைவாறறல ஆகியவறறைப்பற்றித் தெளிவான குறிபபுககள காணபபடாது போயினும், அவர்கள, உழவைபபற்றி அறிய வேணடுவன வற்றை, மிகவும தெளிவாக அறிநதே இருநதனா எனபதற்கு வேண்டிய அகசசான்றுகள் பல, சஙக நூலகளிலும பிற நூல களிலும் பரநது கிடக்கின்றன

இந்த உடலைப்பற்றிப பேசும்போதெல்லாம், 'சோற்று லடித்த கவர்,' 'உணவின் பிண்டம்' என்றே அதற்குப் பெயரிட்டு அழைத்து, உணவு, உடலும உயிரும கூடிவாழ உறுதுணை புரிகின்றது என்ற உண்மையை உலகறியக் கூறினா, "மண்

திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று உணவின் சிறப்பினை எடுத்து விளக்கினார் மணிமேகலை நூலாசிரியர், நாட்டின் இயல்பைப் பற்றிக் கூறவந்த திருவள்ளுவர், 'தள்ளா விளையுளும்' என முதற்கண், என்றும் குறையாத விளையுள் இருப்பதே நல்ல நாட்டிற்குப் பண்பாகும் என்று கூறினார் பிற நாடுகளாலும் விரும்பத்தக்க பெருவளம் உடையதே நாடு, அவ்வாறு விரும்பிய நாடுகள், தன்பால் வந்தால், அவற்றிற்கு வேண்டும் உணவு முதலியவற்றைத் தந்து தாங்கும் வளமிக வுடையதே நாடு, வளம் குறைந்தால் பசி மிகும், பசி மிகுந்தால் பிணி மிகும்; ஆதலின், பிணியும், அதற்குக்காரணமாய பசியும் இல்லாமல் நீங்கவேண்டின், அந்நாட்டில் வளம் பெருகுதல் வேண்டும்; அத்தகைய பெருவளத்தை, அந்நாடு பெற வேண்டுமாயின், அந்நாட்டின் நிலம் ஆற்ற விளைய வேண்டும், நிலம் ஆற்ற விளைய வேண்டுமாயின், இயற்கையாலோ அன்றிச் செயற்கையாலோ உண்டாம் கேடுகள், ஆண்டு இல்லாதிருத்தல் வேண்டும்; நாட்டைப்பற்றித் திருவள்ளுவர் கொண்ட முடிபுகள் இவை; இதில், உணவிற்கு எத்துணை உயர்வு கொடுக்கப்பட்டுளது என்பதை நோக்குங்கள்

நாட்டில், விளைவு மிகுந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்த அவர்கள், பயிரிடத்தக்க நிலம் மிகுதியாக வேண்டும் என்பதையும் உணர்ந்தேயிருந்தனர், அதுகுறித்து, அக்காலத்தே பரந்து கிடந்த காடுகளை அழித்து நாடாக்குவதை அரசர்கள் தங்களுடைய இன்றியமையாக் கடமையாகக் கருதினர்; கருதியதோடு நில்லாது, அவ்வாறு காடுவெட்டி நாடாக்கிய அரசர்களைப் பாராட்டியும் வந்தனர். காடுவெட்டி நாடாக்கி விட்டதினாலேயே நிலம் விளைந்துவிடும் என்ற குருட்டுநம்பிக்கை இல்லாதவராய், நிலம் வளமாதற்கு வேண்டிய நீரின் இன்றியமையாமையை உணர்ந்து, இயற்கைநீர்வளம் உள்ள இடங்களில் அவற்றின் துணைகொண்டும், அவை அற்ற இடங்களில், குளம்வெட்டி அவற்றின் துணைகொண்டும், அந்நிலங்களின் வளத்தைப் பெருக்கினர் "காடுகொன்று நாடாக்கிக், குளம் தொட்டு வளம் பெருக்கி" என்பது அவ்வாறு நாடுகண்டு வளமாக்கிய பேரரசன் ஒருவனைப் பாராட்டிய பட்டினப்பாலைப் பகுதியாகும். "உணவெனப்படுவது நிலத்தொடு நீரே; நீரும், நிலனும் புணரியோர், ஈண்டு உடம்பும், உயிரும் படைத்திசினோரே" இஃது உடம்பையும், உயிரையும் வளர்க்க வேண்டின், நிலவளமும், நீர்வளமும் பெருகச் செய்தல்வேண்டும் என அரசன் ஒருவனை நோக்கிக் கூறிய அறவுரை.

பலதுறையினும் வளர்ச்சியுற்றிருக்கும் இந்தக் காலத்திலும், மக்கள், தங்கள் நிலத்திற்கு வேண்டிய நீருக்குப் பெரிதும் மழையையே எதிர்நோக்கி நிற்கின்றனர் என்றால், அத்தகைய வளர்ச்சியொன்றும் காணாத பண்டைக்கால மக்கள், மழையின் பெருமை உணர்ந்து பாராட்டியதில் வியப்பொன்றும் இல்லை. "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை," "மாரி வறங்கூறின் மன்னுயிர் இல்லை" என்பன அறிஞர் கண்ட வான்சிறப்பு. மழை பெய்து விளைவு மிகுதலால் இன்பம் உண்டாதலை, "வான் நின்று உலகம் வழங்கி வருதலால், தான் அமிழ்தம் என்று உணரற்பாற்று" எனவும், "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித், துப்பார்க்குத் துப்பாயதூஉம் மழை" எனவும் வள்ளுவர் விளக்கினர்; பெயலும் அதனால் உண்டாகும் விளையுளும் மிகுதியாக இருக்கும் நாட்டில், அரசனும் இயல்புளிக் கோலோச்சுவன் எனச், செங்கோலுக்கும் மழையே இன்றியமையாதது என்று அறிந்திருந்தனர், மழை பெய்யாது பொய்ப்பதால் உண்டாகும் கேட்டினை, "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியன் உலகத்து உள்நின்று உடற்றும் பசி" எனவும், "புயல் என்னும் வாரி வளம் குன்றியக்கால், உழவர், ஏரின் உழார்" எனவும் வானம் பெயல் மறப்பின், அந்நாட்டு அரசனும் முறைகோடுவன்; ஆண்டவற்கு நடைபெறும் விழாவும், வழிபாடும் நடைபெறா; தானமும், தவமும் தங்கா எனவும் அறிந்திருந்தனர்.

வான்நோக்கி வாழ்ந்தனரே எனினும், தமக்கு வேண்டிய நீருக்கு, அவ்வானம் ஒன்றையே எதிர்நோக்கி வாழ்வது பாழ்படு வாழ்வாகவே முடியும் என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தனர், வானம் ஒன்றையே எதிர்நோக்கிப் பயிர்செய்யும் நிலம், வயல்வயலாகப் பரந்து கிடப்பினும், பயனில்லை என்பதையும் உணர்ந்திருந்தனர். "வித்திவான்நோக்கும் புன்புலம் கண்ணகன் வைப்பிற்றாயினும், நண்ணி ஆளும் இறைவன் தாட்கு உதவாது." ஆதலின், அந்நிலத்திற்கு வேண்டிய நீரைப் பிறவழிகளில் காணத் தொடங்கினர்; காண முற்பட்டார், அந்நீருணவு, ஆறு, ஊற்று, குளம், கிணறு ஆகிய இவ்விடங்களில் கிடைக்கும் என்பதையும், அவ்வாறு, நீர் அறாமல் ஓடவேண்டுமாயின், அவ்வாற்றின் தோற்றம், பெருமலைக் கண்ணதாதல் வேண்டும் என்பதையும் உணர்ந்து, "இருபுனலும், வாய்ந்த மலையும், வருபுனலும்" ஒரு நாட்டிற்கு இன்றியமையா உறுப்புக்களாம் என்றும் கூறினர். ஆறு, ஊற்று, குளம், கிணறு ஆகியவற்றுள்ளும், தோண்டிய குளம், கிணறுகளே பெரிதும் குறையாதுநின்று பயனளிக்கும் என்பதையும் உணர்ந்து, குளம் தோண்டுவதை வரவேற்றனர்; தோண்டியவரை வாழ்த்தினர்; "குளம் தொட்டு

வளம் பெருக்கி;" "வல்லே, நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத் தட்டோர் அம்ம! இவண் தட்டோரே, தள்ளாதோர், இவண் தள்ளாதோரே," இவை அவ் வாழ்த்துரைகளுள் சில.

நிலவளமும், நீர்வளமும் பெற்றிருந்தாலும், அவ் விரண்டையும் பயன்படுத்தித் தொழிலாற்றும் குடிவளம் இல்லையாயின், அவற்றால் பயனில்லை என்பதை உணர்ந்து, உழவுத்தொழிலையும், அத்தொழில் மேற்கொள்ளும் உழவரையும் இழித்துக் கூறும் இன்று போலாது, அத்தொழிலையும், அத்தொழில் மேற்கொண்டாரையும் பெரிதும் புகழ்ந்து வந்தனர், "மேழிச் செல்வம் கோழைபடாது," "தொழுதுஉண் சுவையின், உழுதுஉண் இனிது," "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்," "உழுவார் உலகத்தார்க்கு ஆணி," "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;" "இரப்போர் சுற்றமும், புரப்போர் கொற்றமும், உழவிடை விளைப்போர்," இவை, அத் தொழிலையும், அஃதுடையாரையும் பாராட்டிய பாராட்டுரைகள்.

உழவுத் தொழிலைப் பேணி வளர்த்து, அதனால் பெருவளம் பெற்ற நாடு, மற்றெல்லா நாடுகளையும், தன் ஆணைவழி அடங்கியிருக்கச்செய்து, ஆட்சிபுரிவது இன்றும் காணக்கூடியதே; இதைத் தமிழர்கள், அன்றே உணர்ந்து, அக்கால அரசர்க்கு உணர்த்தி வந்தனர், "பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக் குடி புறந்தருகுவையாயின், நின் அடிபுறம் தருகுவர் நின் அடங்காதோரே," இது, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை நோக்கி, வெள்ளைக்குடி நாகனார் என்ற உழவர் உரைத்த அறிவுரை "பலகுடை நீழலும், தம் குடைக்கீழ்க் காண்பர்; அலகுடை நீழலவர்" இஃது வள்ளுவர் வழங்கிய அறவுரை

ஒரு நாட்டைப் போரிட்டுக் கைப்பற்ற விரும்புவோர், முதற்கண் அந்நாட்டில் வாழும் மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், பிற நாடுகளிலிருந்து, உட்புகாவாறு, அந் நாட்டைச் சூழ உணவு முற்றுகையிடுவர், இதனால், தன் நாட்டு மக்களுக்கு உணவு இல்லாமையுணர்ந்து, அந் நாட்டரசன் பகைவர்க்குப் பணிந்து போவன்; ஒருநாடு போரில் தோலாது நின்று வெற்றிபெற விரும்புமாயின், அது, உணவிற்காகப் பிற நாட்டை எதிர்நோக்காது, தனக்கு வேண்டிய உணவைத் தானே விளைத்துக் கொள்ளும் பெருவளம் உடையதாதல் வேண்டும்; அந்நிலையிருந்தால், அந்நாடு, பகைவர் உணவு முற்றுகை மேற்கொள்ளினும், அவர்க்குப் பணியாது நின்று வெற்றிபெறல் கூடும். இந்த உண்மையினையும், அன்றைய தமிழர்கள் உணர்ந்திருந்தனர்.

பாரி ஒரு குறுநிலத் தலைவன், சிறந்த கொடையாளி; பறம்பு என்ற மலையையும், அதைச் சூழ உள்ள முந்நூறு ஊர்

களையும் ஆண்டுவந்தவன்; இவன் புகழ் பரவ வாழ்வதைக்கண்ட மூவேந்தர், இவனை வென்று அழிக்க ஆசைகொண்டனர்; நால்வகைப் படையுங்கொண்டு, அவன் மலையை முற்றுகையிட்டனர்; பலநாள் ஆகியும் அவன் பணிந்திலன்; அவன் பணியாமைக்குரிய காரணத்தைப் புலவர், அவன் நண்பர், கபிலர் விளக்குகிறார், பாரியின் பறம்பு மலை, உழவர் உழாமலே விளையும் நால்வகை உணவுப் பொருள்களையும் உடையது, ஒன்று, மூங்கில் நெல், இரண்டு, தீஞ்சுளைப் பலா போன்ற பழவகைகள், மூன்று, வள்ளி போன்ற கிழங்கு வகைகள்; நான்கு, இயற்கையில் பெறும் தேன் வகைகள்; இவற்றுடன், வற்றாத நீர்நிறைந்த சுனைகள் பல, அம்மலை நிறைய உள்ளன; பெரும்படை உடையராயினும், பாரியை வெல்லுதல் இயலாது என்று கூறினார்:

அளிதோ தானே பாரியது பறம்பே!
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்,
உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே,
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளையும்மே.
இரண்டே, தீஞ்சுளைப்பலவின் பழம் ஊழ்க்கும்மே.
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே;
நான்கே, அணிநிற ஓரிபாய்தலின், மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன் சொரியும்மே,
... ... ........ ..    .    .... ..   . . .        ..
தாளிற் கொள்ளலிர், வாளிற் றாரலன்”

இவ்வாறு, உழவின் பெருமை யுணர்ந்த முன்னோர், “அகல வுழுவதினும் ஆழ உழவேண்டும்,” காற்று உட்புகும் அளவு, உழுத புழுதி உலரவேண்டும்; நிலத்தின் உரம் பெருக நிறைய எருப் போடுதல் வேண்டும்; உழுது, எருவிட்டு விதைத்தபின், குறையாமல் நீர்பாய்ச்சுதல் வேண்டும், விளையும் பயிருக்கு ஊறுசெய்யும் களைகளைக் கண்டிப்பாக அகற்ற வேண்டும்; வளரும் பயிரைப் பிறவுயிர்வகைகள் அழிக்காவண்ணம் காத்தல் வேண்டும் என்பனபோன்ற உழவுத்தொழில்பற்றிய அடிப்படை அறிவுகளையும் அறிந்து வாழ்ந்தனர். “தொடிப்புழுதி, கஃசா உணக்கின், பிடித்தெருவும் வேண்டாது சாலப்படும்,” “ஏரினும் நன்றால் எருவிடுதல்,” “கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல், பைங்கூழ் களைகட் டதனொடு நேர்;” “கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு,” “செல்லான் கிழவன் இருப்பின், நிலம்புலந்து இல்லாளின் ஊடி விடும்,” என்பன, உழவுத் தொழில் நுணுக்கம்பற்றி வள்ளுவர் உரைத்தவை.

# மேரி கோரில்லி[1]

[தென்னாப்பிரிக்கா டர்பன், திரு. ச. மு. பிள்ளை]

காலஞ்சென்ற 'மேரி கோரில்லி' என்னும் பெயர் உலகப் பிரசித்திபெற்ற பெயரேயாயினும், ஆங்கிலமொழி அறியாத தமிழ்மக்களுக்கு அந்தப் பெயர் மிகவும் புதுமையாகத் தோன்றும். ஆங்கிலமொழியில் 'நாவல்' என்று சொல்லப்படும் புதினக் கதைகள் எழுதுவதில் மிகுந்த சீர்த்தி பெற்றிருப்பவர்களுள், மேரி கோரில்லி என்னும் மாது முதன்மையானவர். இவரால் எழுதப்பட்டிருக்கும் கதைப்புத்தகங்கள் பல

## கோரில்லியின் குழந்தைப் பருவம்.

மேரி கோரில்லியின் பெற்றோர்கள் மிகவும் ஏழைகளாயிருந்தபடியால் டாக்டர் சார்லஸ் மக்கே (Charles Mackay) என்பவர் கோரில்லியைக் குழந்தைப்பருவத்திலேயே வளர்ப்பு மகளாக எடுத்துக்கொண்டார். குழந்தையாயிருக்கும்போதே கோரில்லி மற்றக் குழந்தைகளோடு சேர்ந்து விளையாடுகிறதில்லை. மற்றக் குழந்தைகள் விளையாடுகிற மாதிரியைக் கண்டாலே, இக்குழந்தைக்கு ஒருவிதமான வெறுப்பு உண்டாகி விலகிக் கொள்ளும். எப்போதும் தனித்திருப்பதிலேயே இந்தக் குழந்தைக்கு அதிக விருப்பம். பேசுவதற்குத் தெரியாவிட்டாலுங் கூட குழந்தையின் பார்வையையும், அமைதியையும் காணும்போது அக்குழந்தை ஏதோ ஒரு பெரிய பொருளைச் சிந்திக்கிறதென்றும், மனோபாவனையில் ஆழ்ந்திருக்கிறதென்றும், டாக்டர் மக்கேயும் மற்றவர்களும் நினைத்து வியந்து பேசிக்கொள்வதுண்டு. டாக்டர் மக்கே அக்குழந்தையின் விருப்பப்படியே அதற்குச் சரியான அறிவு ஏற்படுகிறவரையில் விட்டிருந்தார். குழந்தைக்கு ஏழு வயதானதும், டாக்டர் மக்கே கல்வி பயிற்றுவிப்பதில் கருத்தைச் செலுத்துவாராயினர்.

## கோரில்லி மொழி அறிவு அடைந்தது

தன்னுடைய அறிவு தனக்குப் புலப்பட்டவுடன், கோரில்லி டாக்டர் மக்கேயை மிகவும் நேசிக்கத் தொடங்கினார். அவருக்குத் தகுந்த நண்பரைப் போலவும், மகளைப்போலவும் இருந்து அவருக்குக் கவலை என்பது சிறிதும் தோன்றாதபடி தன்னுடைய உரையாடலினாலும், படிப்பினாலும், மகிழ்ச்சிப்படுத்தி வந்தனர். டாக்டர் மக்கே அவருக்குச் சுவடிகள் சேகரித்துக் கொடுப்பதிலும் எப்படிப்பட்ட புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்று போதிப்பதிலும் மிகவும் ஊக்கம் காட்டிவந்தார். ஆங்கில

* Marie Corelli

மொழியில் கதைகள் எழுதுவதில் மிகுந்த கீர்த்திபெற்றவர்களும், முதன்மையானவர்களுமான சர் வால்டர் ஸ்காட், சார்லஸ் டிக்கென்ஸ், தாக்கரி இவர்களால் எழுதப்பட்டுள்ள கதைப்புத்தகங்கள் அனைத்தையும், அதிநுட்ப ஆராய்ச்சியுடன் மேரி கோரிலலி தம்முடைய பதினோராவது அகவைக்குள் படித்து முடித்துவிட்டார். அப்படிப் படித்து முடித்ததும், நம்மவர்கள் பலர் படிப்பதுபோல் வெறும் கதையைத் தெரிந்துகொள்ளும் நோக்கத்தோடு மட்டும் படிக்காமல், தாம் படிக்கும் நூல்களில் காணப்படும் குணகுற்றம் இரண்டையும் தெளிவாய்த் தெரிந்துகொள்ளும் நோக்கத்தோடு தருக்கநெறியைத் தழுவியும், ஆராய்ச்சிமுறையை ஒட்டியும் ஊன்றிப் படித்தார்.

உரைநடை நூல்களைப் படித்து இன்பமனுபவிப்பதைக் காட்டிலும், அறிவும் ஆற்றலுமிக்க சான்றோரியற்றிய செய்யுட்களைப் படித்துப் பேரின்பம் நுகர்வதில் மேரி கோரிலலிக்கு முதன்மையான விருப்பமுண்டு. இந்த விருப்பமும் இவருக்கு மிக்க இளம்பருவத்திலேயே ஏற்பட்டுவிட்டது. கீட்ஸ், ஷெல்லி, பைரன், டென்னிஸன் ஆகிய இந்த நான்கு ஈடும் எடுப்பும் இல்லாப் புலவர்களியற்றிய செய்யுட்களைப் படிப்பதிற்றான் இந்த மாதுக்கு மிகுந்த விருப்பமுண்டு. மற்றப் புத்தகங்களைவிடக் கிறித்தவர்களுடைய வேதப்புத்தகமாகிய விவிலிய நூல்களையும், உலகத்தோரெல்லோரும் ஒருங்கே புகழும் ஷேக்ஸ்பியப் பெரும் புலவர் இயற்றிய நாடகங்களையுமே இவர் சிறந்தவைகளெனக் கொண்டு, அவைகளையே அதிக ஆவலுடன் படித்துவந்தார். கோரிலலி இந்த நூல்களை எல்லாம் தம்முடைய பதினைந்தாம் வயதுக்குள் படித்துவிட்டு உடனே திங்கள் இதழ்களுக்குக் கட்டுரைத் தானஞ்செய்யவும், நூல்கள் எழுதவும் துவங்கிவிட்டார்.

### கோரில்லியும் இசையும்

கோரிலலிக்கு இயற்கையாகவே அருமையான இசை அறிவும் இசையறிவுக்கேற்ற இனிமையான குரலும் வாய்ந்திருந்தன. ஆதலால், அவர் இசைப்பயிற்சி செய்யத் துவங்கினார். இசை பாடுவதையும் இயங்கள் வாசிப்பதையும், வாழ்க்கை வழியாகக்கொண்டுவிடலாமென்று அவர் கருதினார். அவருடைய உற்றாரும் உறவினரும் மேற்படி வேலைகளே அவருக்குத் தகுந்தவையென்றும், அந்த வேலைகளால் பெரும் புகழும் பொருளும் தேட ஏது உண்டாகுமென்றும் வற்புறுத்திக் கூறினார்கள். இருந்தபோதிலும், தெய்வத் திருவுளத்தை யாரறிவார்கள்? இந்த வேலைகளைவிடச் சிறந்ததும், மதிப்பிற்குரியதும் பயனுள்ளதுமான வேறொரு வேலை மேரி கோரில்லியால் செய்யப்படவிருப்பதை யாரால் தடுக்கமுடியும்?

### கோரில்லிக்கு ஏற்பட்ட குடும்ப இடுக்கண்

டாக்டர் மக்கேயின் உடல்நிலை விரைவாகக் குன்றி அவர் நோயாளராகும்படி நேரிட்டது. இதனால் குடும்பச் செலவுக்கு வேண்டிய பொருள்கள் குறைவுபடத் தொடங்கின. ஆகவே, குடும்பப்பொறுப்பைச் செய்யவேண்டுமே என்னும் பெருங் கவலை கோரில்லிக்கு வலுவாய் ஏற்பட்டது. டாக்டர் மக்கே யின் அன்பினாலும், ஆதரவாலும், மேரி கோரில்லிக்குக் குழந் தைப்பருவத்திலிருந்து இதுவரையிலும், துன்பம் இன்ன தென்று சிறிதும் தெரியாமல் மிகுந்த செல்வாக்கோடு வளர்ந்து வந்தவராதலால், திடீரென்று குடும்பக்கவலை அவர் தலையில் வந்து சேர்ந்தவுடன், பழக்க அறிவு இல்லாமல் மிகுந்த வருத்தப் பட்டுத் தியங்குவாராயினர். நல்லவேளையாய்ப் பொதாவைவர் என்னும் பெயருடைய ஒரு பெல்ஜிய தேசத்து மாது, இந்த முட்டுப்பாடான சமயத்தில் கோரில்லிக்கு உதவியாக வந்து சேர்ந்தார். இந்த மாது டாக்டர் மக்கேயின் பழைய நண்ப ராயும், இவருடைய குடும்பத்துக்கு மிகவும் வேண்டியவராயு முள்ள ஒரு சீமாட்டியாவார். டாக்டர் மக்கேயின் உடற் காப்புப் பேணுதல் முதலியவைகளையும், கோரில்லியின் குடும்பக் காரியங்களையும் பொதாவைவர் என்னும் மாது, நேரில் தானே கவனிக்கத் தொடங்கியபடியால், கோரில்லிக்குக் குடும்பக்கவலை சிறிது நீங்கிற்று. இந்த மாது எக்காலமும், மேரி கோரில்லி யோடு கூடவே இருக்கத் தீர்மானித்து, அவருக்குக் கவலை சிறிதுமேற்படாமல் செய்துவந்தார். டாக்டர் மக்கேயினுடைய உடல்நலமின்மையும் குடும்பக்கவலையும், மேரி கோரில்லியை இசைப்பயிற்சி செய்யமுடியாதபடி தடுத்தன. ஆகவே, ஊதியம் தரக்கூடிய வழியில் தம் இலக்கண இலக்கியப் பயிற்சியைப் பயன்படுத்த முற்பட்டார்.

கோரில்லி முதன்முதல் எழுதிய நூல் "இரண்டு உலகங்களைப் பற்றிய ஒரு கற்பனைக் கதை" (A Romance of Two Worlds) என்னும் பெயர் புனைந்ததோர் நாவலாகும். இதை எழுதி முடித்தவுடன் கோரில்லி லண்டனில் முதன்மைப் புத்தக வணிகர்களாயிருந்த "பெண்ட்லி அண்ட் சன்ஸ்" என்னும் கம்பெனியாருக்கு மேற்படி கதையின் கையெழுத்துப் படிகளை விலைக்கு வாங்கிக்கொள்ளும்படியாக அனுப்பினர். முதல் முதல் ஒருவர் நூல் எழுத, அந்த நூல் எவ்வளவுதான் சிறந்ததா யிருந்தபோதிலும், புத்தக வணிகர்களுக்கு அந்த நூல் பொது மக்களால் நன்கு மதிக்கப்பட்டு விற்பனையாகுமோ, ஆகாதோ என்ற ஐயம் ஏற்படுவது இயற்கையாதலால், கோரில்லியின் கதைப்புத்தகத்தின் அருமையை உணராதவர்களாய் "பெண்ட்லி"

அண்ட் சனஸார்" அவருடைய நாவல் தங்களுக்கு வேண்டிய தில்லை என்று மறுத்துவிட்டார்கள். இருந்தபோதிலும் அந்த நாவலின் கையெழுத்துப்பிரதியைப் படித்துப் பார்த்த இரண்டொரு பேரறிஞர்கள் அந்த நாவலில் அமைந்திருக்கும் சிறந்த கருத்துக்களையும், மனோபாவனைகளையும், நடையின் சிறப்பினையும் கண்டு பேரன்பு கொண்டவர்களாய், பலரிடத்திலும் அதைப்பற்றி வியந்து பேசினார்கள்.

இப்படிப் பேசிக்கொண்டது ஊர்முழுதும் பரவிக், கடைசியில் பெண்டலி அண்டு சன்ஸின் சொந்தக்காரராகிய ஜோர்ஜ் பெண்டலியினுடைய காதிலும் விழுந்தது. முதலில் கையெழுத்துப் பிரதியை வாசித்துப் பார்க்காமலே "வேண்டா" மென்று மறுத்துவிட்ட அக் கம்பெனியார், மக்கள் பேசிக் கொள்வதைக் கேட்டு ஆச்சரியப்பட்டவர்களாய், மறுபடியும் அக் கையெழுத்துப் பிரதியை அனுப்புவிக்கும்படி கோரிலவிக்கு எழுதினார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டபடியே கையெழுத்துப் பிரதி மறுபடியும் அனுப்பப்பட்டது. அக் கம்பெனியின் சொந்தக்காரர் அதைத் தாமே நேரில் வாசித்துப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியுள்ளவராய் அந்த நாவலைத் தாம் விலைக்கு வாங்கி அச்சிடச் சம்மதித்தார். நாவல் அச்சிடப்பட்டுப் புத்தகமும் வெளிவந்துவிட்டது.

பொதுமக்கள் எவ்வளவுக்கு அதைப் பாராட்டி ஏற்றுக் கொள்வார்களென்று கோரிலவி உத்தேசித்தாரோ, அதைவிட நூறுமடங்கு அதிகமாகவே பொதுமக்கள் அதைப் பாராட்டிச் சிலாகித்தார்கள். இதைக் கண்டதும், மேரிக்குப் பன்மடங்கு ஊக்கம் ஏற்பட்டது. நூல்கள் எழுதுவதிலும், படிப்பை விருத்தி செய்வதிலும், தம்முடைய ஆயுள் முழுவதையும் செலவு செய்கிறதென்னும் ஒரே பிடிவாதமான நிரணயம் செய்துகொண்டு, நூல்களை மளமளவென்று எழுத ஆரம்பித்தார் கோரிலவி, தாம் உடல்நலமின்மையாலும், குடும்பக்கவலையாலும், பணமுட்டுப்பாட்டாலும், வருந்திய காலங்களில் "வெண்டெட்டா" "தெல்மா" "ஆர்டத்" என்னும் மூன்று நாவல்கள் அவரால் எழுதப்பட்டன. கடைசியில் சொல்லப்பட்ட "ஆர்டத்" என்னும் நாவலைப்பற்றிப் புகழ்ந்து விக்டோரியா மகாராணியாருக்குப் பிரதம மந்திரியாயிருந்த வில்லியம் இ கிளாட்ஸ்டனும், மிகவும் புகழ்பெற்ற கவிவாணராகிய டென்னிஸனும் மேரி கோரில்லிக்கு நேராகக் கடிதமெழுதித், தங்கள் நற்கருத்தைத் தெரிவித்தனர்.

ஸர். ப்ரடரிக் லேட்டன் என்னும் கீர்த்திபெற்ற ஓவியக் காரர் தாம் இறந்துபோவதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு

மேரி கோரில்லி 'ஆடத' என்னும நாவலில் "கனவு நகரததை" எவ்விதம வருணிததிருககிறரோ, அநத வருணைபபடியே படமெழுத வேணடுமென்னும ஒரு பிரியம எனககு ஏறபட்டிருக்கிறது என்று சொன்னராம. ஆனல அவருடைய எண்ணம நிறைவேறுகிறதற்கு முனபு அவா காலஞ சென்று விட்டார். மேரி கோரில்லியால சுமார் அறுபது பெரியதும, சிறியதுமான புததகஙகள எழுதபபட்டிருககின்றன இவைகளுள மிகவும சிறநததும அனைவராலும கொண்டாடபபடுவதும, காலஞசென்ற எடவாட் சககரவாததியின நனமதிப்பைப் பெற்றதுமான நாவல "டெமபரல பவர்" என்னும ஒரு சிறநத நூலாகும் இநநூலை வியநது பாராட்டி "ரெவயூ ஆப் ரெவ்யூஸ்" என்னும மாதபபததிரிகையின ஆசிரியா விஸ்டெட் கருதது வெளியிட்டிருககிறா இதறகு அடுததபடியாய்க் கொணடாடபபடுவதும, 1895-ம வருடததில முதலில எழுதப் பட்டு, ஐமபததிரணடுபதிபபுப் போடபபட்டிருபபதும, பதிப்பொனறுககுப பதிஞயிரம பிரதிகளுககுக குறையாதபடி அச்சிடபபட்டிருபபதுமான நாவல், "சாததானுடைய துககஙகள" (Sorrows of Satan) எனனும பெயரையுடைய ஒரு சிறநத கறபனைக கதையாகும 1910-வது வருடததில மோட்டார வண்டியைபபறறிக கண்டிததுப "பிசாசினுடைய மோட்டார வணடி" (Devils Motor Car) எனனும பெயருடன் ஒரு நாவல இவரால் எழுதப்பட்டு வெளிவநதிருக்கிறது

### கோரில்லியின் உன்னத மாளிகை

இஙகிலாநதில் "ஸடார்ட் போர்ட்-ஆன்-ஆவன்" (Stratford-on-Avon) என்னும் பெயருடைய ஒரு கிராம மிருககிறதென்பதை நம நேயாகளில் பலா அறிந்திருக்கலாம. இநத இடம் ஷேக்ஸபியா மகாகவி பிறநத இடமாதலால இதறகுத தனியாக ஒரு மகிமை ஏறபட்டிருககிறது உடல்நலமடைகிற வரையில இநதக் கிராமததில் வசிக்கலாமென்னும் உத்தேசத்துடன், முதலில் கோரில்லி இந்த இடததிற்கு வநதாா. ஆனல் பிறகு தமமுடைய ஆயுளபரியநதம இநத இடததிலேயே வசிகக வேணடுமென்று பிரியபபட்டவராய்ச் சொநததததுக்கே ஒரு வீடு சிறந்ததாக வாஙக ஆரமபிததாா. மிகப பழைமையானதும, இடிநதுகிடந்ததுமான "மேஸன்க்ராப்ட்" என்னும பெயருடைய ஒரு வீட்டை விலைக்கு வாஙகினர் இந்த வீட்டை வாஙகின பினபு அதைப் பரிசோதித்துப் பாாககவே, எலிசபெத் மகாராணி அரசாட்சி புரிந்தகாலத்தில் கட்டப்பட்ட ஒரு பெரிய பலமான கட்டிடமென்று தெரியவந்தது.

அந்தக் கட்டிடத்தின் அழகும், மகிமையும் இதற்கு முன்பு மறைந்துகிடந்தன. மேரி கோரில்லி அந்தக் கட்டிடத்தைப் பெரும்பொருள் செலவிட்டுப் பழுதுபார்த்துப் புதுப்பித்தார். அந்தக் கிராமத்தில் இவருடைய மாளிகையே மற்றவைகளைவிடச் சிறந்ததாயும் அழகாயும் இருந்தது. இக் கிராமத்தைப் பார்க்கச்செல்லும் வெளியூரார்கள் இந்த மாளிகையைப் போய்ப் பார்க்காமல் திரும்புகிறதேயில்லை. இந்த மாளிகையில் அமைந்திருக்கும் அற்புததோட்டம் எப்படிப்பட்டவர்களையும் ஈர்க்கும் இயல்புடையதா யிருந்தது. இந்தத் தோட்டத்தில் உலாவுவதும், சிந்திப்பதும், மனோபாவனை செய்வதும், எழுதுவதும், படிப்பதும் கோரில்லியின் முக்கியமான வேலைகள். கோரில்லி நட்புக்குத் தகுந்தவராக இருந்தபோதிலும், பகைமை உண்டாகிவிட்டால் அவரைச் சமாதானப்படுத்துவது எவ்வகையாலும் முடியாத செய்தி

கோரில்லி தம் காலத்தைக் கழித்தவிதம்

காலை பத்துமணி முதல் இரண்டுமணி வரையில், கோரில்லி நூல் எழுதுவதில் முனைந்திருப்பார். வேறு கவலையின்றியும், சலிப்படையாமலும் அவர் நாடோறும், இந்த நேரத்தில் எழுதியபடியே இருப்பார். தாம் எழுதப்புகும் கதையைப் பருமையாக முதலில் பென்ஸிலில் குறித்துக்கொண்டு, அதன் பிறகு விவரமாகக் கதையை எழுதுவார். இப்படி எழுதின கதையை மறுபடியும் திருத்தித் தம்முடைய கையாலேயே மையினால் எழுதுவார் அதையே மறுபடியும் டைப் ரைட்டிங் செய்வதற்காக நிறுத்தி நன்றாக எழுதுவார். கடைசியில் டைப் செய்து பிறகு அச்சிடுவதற்கு அனுப்பப்படும். காலை ஐந்து மணிக்கு எழுந்து படகு வலித்துக்கொண்டு வேடிக்கையாகச் செல்லுவார். இல்லாவிட்டால், "ஷெட்லாண்டு போனி" யில் சவாரி செய்வார். ஏழு, ஏழரை மணிக்கெல்லாம் வீட்டுக்குத் திரும்பிவிடுவார் எழுதுவதில் எவ்வளவு திறமை மேரிக்கு ஏற்பட்டிருந்ததோ, அவ்வளவு திறமை, பேசுவதிலும் அவருக்கு ஏற்பட்டிருந்தது. மேடையிலேறி அவர் விரிவுரைசெய்யத் தொடங்கிவிட்டால் எல்லாரும் அவர் வாயைப் பார்த்தவண்ணமாயிருப்பார்கள். மறைந்துபோவதற்கிருந்த ஷேக்ஸ்பியரின் இரு வீடுகளை இவர் இங்கிலாந்துக்கு மீட்டுக்கொடுத்திருக்கிறார். இனி இவருடைய பண்பாட்டுச்சிறப்புக்களை இவருடைய நூல்களிலிருந்துதான் அறியவேண்டும்.

# சடையவள்ளல்கள் இருவர்

[துடிசைகிழார் திரு அ. சிதம்பரனார்.]

புதுவைச் சடையன், திருவெண்ணெய் நல்லூர்ச் சடையன் ஆகிய இரு வள்ளல்களும் வாழ்ந்தது கி. பி 12-ம் நூற்றாண்டு ஆகும். இவர்கள் இருவரும் வாழ்ந்த நாடு, ஊர் முதலியவைகளைப்பற்றிச் சரிவரத் தெரிந்துகொள்ளாததால் சில புலவர்கள் வள்ளல்கள் இருவரும் ஒருவரென்றே எழுதி விட்டார்கள். ஆதலின், இவ் வள்ளல்கள் வாழ்ந்த நாட்டைப்பற்றிச் சிறிது கூறுவாம் :

நடுநாடு என்பது சோழநாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் இடையில் உள்ளது. அவ்விரண்டு நாடுகளுக்கும் நடுவே உள்ளதால் அது நடுநாடு என்னப்பட்டது

நடுநாடு மூன்று சிறு நாடுகளாகப் பகுக்கப்பட்டு இருந்தது. அப் பிரிவுகளாவன :—

(1) திருமுனைப்பாடி நாடு (2) மகதநாடு (3) சேதிநாடு. திருமுனைப்பாடி நாட்டின் தலைநகர் திருவெண்ணெய்நல்லூர் ; மகத நாட்டின் தலைநகர் ஆறறூர ; இதனை ஆறை என்றும் வழங்குவர் ; சேதிநாட்டின் தலைநகர் திருக்கோவலூர்

திருமுனைப்பாடி நாட்டை நரசிங்கவர்மனும் அவன் மூதாதைகளும் ஆண்டுவந்தார்கள்

மகத நாட்டை ஏகம்பவாணர் முதலியாரும் அவன் முன்னோர்களும் ஆண்டுவந்தார்கள்.

சேதிநாட்டை மலைமன்னர் வகுப்பைச் சேர்ந்த காரியும் அவன் முன்னோர்களும் ஆண்டார்கள்.

புதுச்சேரி என்ற பெயருடைய நகர் இரண்டு உண்டு. ஒன்று நடுநாட்டில் கடலோரம் உள்ளது. அது இப்போது பிரஞ்சுக்காரருக்கு உரித்ததாய் இருக்கிறது.

இன்னொன்று, சோழநாட்டில் மயிலாடுதுறை (மாயூரம்)க்கு ஐந்துகல் தொலைவில் காவிரிக்கரையில் உள்ளது. இதற்கு நவபுதுச்சேரி என்றும் பெயர்.

புதுச்சேரி என்ற சொல் புதுவை என மருவியும் வழங்கப்பட்டு வருகிறது.

சோழநாட்டில் காவிரிக்கரையில் நவபுதுச்சேரியை அடுத்து மூவலூர், வெண்ணெய்த் திருவழுந்தூர் என்ற ஊர்களும் அடுத்தடுத்து இருக்கின்றன.

சோழநாட்டில உள்ள வெண்ணெய் என்னும் ஊருக்கு 'வெண்ணெய்' எனறே பெயா நல்லூர் என்ற ஒட்டுக் கிடையாது. நடுநாட்டில உளள வெண்ணெய் என்னும் ஊருக்குத்தான் வெணணெய நல்லூர் எனறு பெயா.

ஆதலின், இலக்கியங்களில் 'வெண்ணெய்' என்று ஒட்டு இலலாமல வழஙகபபடுமபோது சோழநாட்டு 'வெண்ணெய்' என்ற ஊா எனறும, ஒட்டுடன 'வெண்ணெய் நல்லூர்' என்று வழஙகபபடும்போது நடுநாட்டு வெண்ணெய் நலலூா என்றும் கொள்ளவேண்டும்.

நடுநாட்டுப புதுச்சேரியினின்றும வேறு பிரிததுக் காட்டவே, சோழநாட்டுப புதுசசேரியை நவ புதுசசேரி என்று நாலாயிரக் கோவையில் ஒட்டககூத்தா பாடியுள்ளார் அது வருமாறு :-

நாலாயிரக கோவை — சுரம்போக்கு துறை

"பதிநோககி அனனையைத தெணடனிட டேனெனும பாஙகியரை
எதிர்நோககி நினறு தழுவுகின றேனெனு மென்று பொன்னி
நதிநோககி வாழ நவபுதுச் சேரிநன னூட்டி லென்றன
விதிநோக்கிக் காளைபின மேவுகின றேன்எனும வேதியரே"

என்பதாகும்.

செநதமிழப பததிரிகையில சேது சமஸதான வித்துவான் திரு ரா இராகவையங்கார் அவாகள 'ஒட்டக்கூததர் புகழேநதி' எனற தலைபபினகீழ,

"கூத்தா தம் கல்விநிறைவில்லாத இளமைப்பருவததில் சோழநாட்டில் உள்ள புதுவையினகண் குணங்கொள் சடையன், புதுவைச்சடையன்—புதுசசேரிக் கொடையன, புதுவைத் திரிகர்ததன் எனறு வழங்கப்பெற்ற சிறபபுப பெயர்களுககு உரியவரும், தமிழ் காததல், பேணுதல், பெருக்குதல் முதலியவற்றில மிககாரும், வரையாது அளிக்குமவளளலும், பெருநிலக் கிழவரும், வேளாண் செல்வரும் ஆகிய வெண்ணெய் நலலூாச் சடையப்பர் தந்தையார் சங்கரப பிரபுவின் சமுகததைச் சென்று அடைந்து, அவரது அன்பையும் ஆதரவையும் பெற்று, அவர் விருமபியாங்கு அவருக்கு வெற்றிலைச்சுருள் மடித்துக் கொடுக்கும அடைப்பைத் தொழிலில் அமர்நது இருநதனர்

அதற்கு,

"புதுவைச் சடையன பொருந்து சங்கரனுக்கு
உதவித தொழில் புரி ஒட்டக் கூததனை',

என்ற தமிழ்நாவலர் சரிதையில் காணப்படும் செய்யுளே போதிய சான்று என்று கூறுகிறார்.

இக் கூற்றில் புதுவைச்சடையனை திருவெண்ணெய் நல்லூர்ச் சடையனாகக் கருதி இருப்பது நோக்கற்பாலது.

"கோலாகல மன்னரில் அவன்போல் கொடுத்தே புகழ்கொண்டாரார்
மேலாக் கவுடப் புலவனெனும் விழுப்போர்க் கூத்தன் முழுப்பேராய்
நாலாயிரக்கோவையும் புனைய நவிலகென நிசைத்து நாட்டுபுகழ்
மாலாமெனுஞ்சரங் கயன்வாழ்வு வளரும் சோழ மண்டலமே"

—சோழமண்டல சதகம்.

## மேற்கோள் செய்யுள்

"புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்கு
உதவித் தொழில்புரி ஒட்டக் கூத்தனை
கவிக்களிறுகைக்கும் கவிராட் சதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி'
'வேறு மங்கலநாள் வியந்து காங்கயன்மேல்
கூறு நாலாயிரக் கோவை கொண்டு யானதோன"

என்ற சோழமண்டல சதகத்திலுள்ள செய்யுட்களை நோக்க, ஒட்டக்கூத்தரைத் தனக்கு அடைப்பக்காரனாக வைத்துக் கொண்டு, கல்வி பயிற்றுவித்தது, கவுடப் புலவனுக்கியவர் புதுவைச் சடையன் தகப்பனார் சங்கர பிள்ளை (=சங்கரப் பிரபு) என்று தெரிகிறது.

சங்கரன் பிள்ளையின் மகனார் திரு காங்கேயன் பிள்ளை என்பாருக்கே புதுவைச்சடையன் - குணங்கொள்சடையன் - புதுச்சேரிக் கொடையன் - புதுவைத் திரிகாத்தன் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. இங்குக் கூறிய புதுவை (புதுச்சேரி) என்பது சோழநாட்டில் காவிரிக்கரையில் உள்ள நவபுதுச்சேரியாகும். இவர் கார்காத்தார் மரபைச் சேர்ந்தவர். இவரே ஒட்டக் கூத்தரால் நாலாயிரக்கோவை பாடப்பெற்றவர். தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பதிலும் விருந்தோம்பலிலும் இணையற்றவர்.

இவ் வாராய்ச்சிக்கு மிக்க உதவியாய் இருந்த என் நண்பர் ஆலவேலி முத்து வைத்தியநாத முதலியார் என்பவர் மூவலூர்க் கோவிலில் காணப்படும் கல்வெட்டுப்பாட்டு ஒன்றை எழுதி அனுப்பினர்.

மூவலூர் என்பது மாயவரத்துக்கு மேற்கே $1\frac{1}{2}$ கல் தொலைவில் காவிரிக்கரையில் உள்ளது. புதுவை - வெண்ணெய் - திருவழுந்தூர் (=தேரழுந்தூர்) முதலிய ஊர்களும் காவிரிக்

கரையில் அடுத்தடுத்து உள்ளன. இம் மூவலூரே கம்பன் பிறந்த ஊர் என்றும் கம்பனுடைய தகப்பனார் ஆதித்தன் என்பான் என்றும் மூவலூர் திருவழுந்தூர் நாட்டைச் சேர்ந்ததென்றும் அங்குள்ளோர் கூறுப.

புதுவைச் சடையனைக் குறித்த மூவலூர்க் கல்வெட்டு வரிகள் வருமாறு :

கம்பர் பாட்டு

"மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதும் காவேரி—பொய்கழுவும்
போர்வேற் சடையன் புதுவையான் இல்லறத்தை
யார்போற்ற வல்லார் அறிந்து."

கம்பர் காவிரி எச்சிற்பட்ட பாடினார் என்ற குறிப்புடன் தமிழ் நாவலர் சரிதை 70-ம் பாடல் பாடப்பட்டுள்ளது மேற்காட்டிய கல்வெட்டு அடிகளை ஆதாரவாகக் கொண்டதே.

ஆதலின், கம்பர் தம் இளம்பிராயத்தில் நவபுதுவைக்குச் சென்றிருந்தபோது புதுவைச் சடையப்ப பிள்ளையினுடைய விருந்தோம்பலைப் பற்றிச் சிறப்பித்துப் பாடிய பாட்டைத்தான் மூவலூர்க்கோவிற் சுவரில் வெட்டியுள்ளார்கள்.

ஆதலின், புதுவைச் சடையனும் வெண்ணெய் நல்லூர்ச் சடையனும் ஒரு காலத்தவர் ஆனாலும் வேறுவேறு நாட்டவர், வேறுவேறு ஊரவர், வேறுவேறு குலத்தவர் ஆவர்.

புதுவைச்சடையன் கார்காத்த மரபைச் சேர்ந்தவர் வெண்ணெய்நல்லூர்ச்சடையனே தொண்டைமண்டல வேளாளர் மரபைச் சேர்ந்தவர். முன்னவர் சோழநாட்டார், பின்னவர் நடுநாட்டார். புதுவைச் சடையன் தகப்பனார் சங்கரன் பிள்ளை; வெண்ணெய்நல்லூர்ச் சடையன் தகப்பனார் காங்கேய பூபதி.

வெண்ணெய் நல்லூர்ச்சடையப்ப முதலியார் மகன் பெயரும் காங்கேய பூபதி. சடையப்ப முதலியார் தம் தந்தை பெயரையே தம் மகனுக்கு இட்டு வழங்கினார். காங்கேய பூபதி நடுநாட்டில் கடற்கரைப் பக்கம் உள்ள புதுச்சேரியிலும் வாழ்ந்து வந்தார். அதனால் அவருக்குப் புதுவைக்காங்கேயன் என்றும் பெயர் உண்டு.

வெண்ணெய்நல்லூர்ச் சடையப்பமுதலியாருடைய மகள் வயிற்றில் பிறந்தவர்தான் பொய்கண்டகன்ற மெய்கண்டதேவர். இம்மெய்கண்டதேவருடைய நன்மாமனே காங்கேய பூபதி என்பவர். மெய்கண்டதேவர் இளமைப்பருவத்தில் தம் அம்மான் வீட்டில் வெண்ணெய்நல்லூரிலேயே வளர்ந்து வந்தார். மெய்

கண்டதேவருடைய தகப்பனார் அச்சுத களப்பாளர். அவருடைய ஊர் திருப்பெண்ணாகடம்.

கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியது கி. பி. 12-ம் நூற்றாண்டு என்பது அடியில் குறிப்பிடும் தனியன்களால் வெளியாம்.

"ஆவின் கொடைச்சகரர் ஆயிரத்து நூற்றெழுபத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்
சீரார் குணாதித்தன் சேய் அமையப் பாடினான்
காராரகாகுத்தன் கதை."

"எண்ணிய சகாப்தம் எண்ணூற் றேழின்மேல்
...... . ...... . .... . .."

முதலில் கூறப்பட்ட பாட்டின்படி கி. பி. 1178-லும், இரண்டாவது கூறப்பட்ட பாட்டின்படி கி. பி 1185-லும் இராமாயணம் அரங்கேற்றப்பட்டது என்று ஏற்படுகிறது.

ஆதலின், இராமாயணம் அரங்கேற்றுப்படி ஒருநாளில், ஒரு மாதத்தில் நடக்கவில்லை என்றும், ஏழு ஆண்டுகள் ஆயிற்றென்றும் தெரிகிறது

அரங்கேற்றுப்படி நடந்த சரித்திரத்தை நோக்கினாலும், கம்பர் தில்லையில் தீட்சிதர்களை ஒன்றுசேர்த்துக் கழித்த காலத்தையும், திருவரங்கத்தில் கலனாரு நரசிங்கத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்த காலத்தையும், இன்னும் எத்தனையோ புலவர்களிடம் சென்று சென்று அங்கீகாரம் பெற்றதை நோக்க ஏழு ஆண்டுகள் ஆகியிருக்கும் என்றே சொள்ளவேண்டி இருக்கிறது.

ஆதலின், கம்பர் கி. பி 1146 முதல கி. பி. 1162 வரை அரசாண்ட சோழன் மூன்றும் இராசராசன் காலத்திலும், கி. பி. 1162 முதல் கி பி. 1166 வரை அரசாண்ட ஐயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்க் கோட்டத்துச் சிறுகுன்ற நாட்டுக் காரிகைக் குளத்தூர் சேனாதிபதி திருச்சிற்றம்பலமுடையா பெருமாள் நம்பி காலத்திலும், கி. பி. 1166 முதல் கி. பி. 1178 வரை அரசாண்ட சோழன இரண்டாம் இராசாதிராசன் காலத்திலும், கி. பி. 1178 முதல் கி. பி. 1216 வரை அரசாண்ட மூன்றும் குலோத்துங்கச் சோழன் காலத்திலும வாழ்ந்தவர் ஆவர்.

ஆதலின் கம்பர் காலம் கி. பி 1146 முதல் கி. பி. 1216 வரை என்று கொள்ளலாம்.

ஒட்டக்கூத்தர் காலமோ கி. பி. 1090 முதல் கி. பி. 1162 வரை என்று கொள்ளக்கிடக்கின்றது.

இதுகாறும் கூறியவாற்றால், வெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப முதலியாரின் மகனார் காங்கேயபூபதி ஒருவர் என்றும், நவபுதுச்சேரிச் சங்கரன்பிள்ளை மகனார் புதுவைச் சடையன் என்ற காங்கேயன் பிள்ளை ஒருவர் என்றும் அறிந்தாம்.

இவர்களைத் தவிர மூன்றாவது காங்கேயன் ஒருவர் உண்டு. அவருக்கு அரும்பாக்கத்துக் கிழான் - நரலோக வீரன் - தொண்டையர்கோன் - காலிங்கர் ஏறு - மணவிற் கூத்தன் - மணவிற் காங்கயன் என்ற மறு பெயர்கள் உண்டு. இவர் தொண்டை மண்டல வேளாளமரபைச் சேர்ந்தவர். இவர் மணவூர்க் கோட்டம், மணவூர் நாடு, மணவில் நத்தம் அரும்பாக்கிழான் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்று சாசன ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்[1].

இக் காங்கேயன் 12-ம் நூற்றாண்டில் முதலாம் குலோத்துங்கன், விக்கிரமச் சோழன் இவர்களுக்கு அமைச்சனாகவும் படைத்தலைவனாகவும் விளங்கினான்

ஒட்டக்கூத்தர் தாம் பாடிய விக்கிரமச் சோழன் உலாவில்:

"................ .....வேங்கையினும்
கூடார் விழிஞத்தும், கொல்லத்தும், கொங்கத்தும்
ஓடா விரட்டத்தும், ஒட்டத்தும்—நாடாத்
தடிஎடுத்து வெவ்வேறு நாசிரிய வீரக்
கொடி எடுத்த காலிங்கர் கோனும்"

என்று இக் காங்கேயனைக் காலிங்கர்கோன் என்று சிறப்பித்துள்ளார். இவன் சேரனுடைய ஆற்றலையும் தென்னவன் விறலையும் அழித்தவன் என்று சாசனங்களால் தெரிய வருகிறது.

ஆதலின், மணவிற் காங்கேயன், புதுவைக் காங்கேயன், திருவெண்ணெய்நல்லூர்க் காங்கேயன் மூவரும் வேறு வேறு என்று கொள்ளக் கிடக்கிறது.

ஒட்டக் கூத்தரால் பாடப்பெற்றவர் புதுவைக் காங்கேயனும், மணவிற் காங்கேயனும் ஆவர். புதுவைக் காங்கேயன் பேரில் நாலாயிரக் கோவையும், மணவிற் காங்கேயன் பேரில் அருமைத் தொள்ளாயிரமும் ஒட்டக்கூத்தர் பாடியுள்ளார். திருவெண்ணெய் நல்லூர்க் காங்கேயனைப்பற்றி ஒட்டக்கூத்தர் பாடவில்லை.

ஒட்டக்கூத்தர் செங்குந்தர் மரபைச் சேர்ந்தவர். அவருடைய தகப்பனார் சிவசங்கர முதலியார், தாயார் வண்டார்குழலி

1. Vide No 86 5 9-9 Vol I, 175 of 1919 திருபுவனி; 120 of 1888 சிதம்பரம்; 369 of 1921 திருவதிகை; 98 of 1903 திருப்புத்தூர்; Vide also செந்தமிழ் pp 255 - 256.

அம்மையார் ஒட்டக்கூத்தருடைய இயற்பெயர் கூத்தர் என்பதே. அதனால், அவரை அம்பலக் கூத்தர் என்றும் ஆனந்தக் கூத்தர் என்றும கூறுப

புதுவைச் சடையன் என்ற காங்கேயன் கார்காத்த மரபைச் சோநதவன் என்பது இன்னொரு கல்வெட்டுப பாடலால் வலியுறுகின்றது இக் கல்வெட்டுபபாடலை மூவலூாக் கோவிலினின்றும் எழுதி உதவியவா என் நண்பர் ஆலவேலி முதது வைததியநாத முதலியார் ஆவர்.

புதுவைச்சடையன் வழித்தோன்றலான, கி. பி. 1450-ல் வாழ்ந்த, பிள்ளைப் பெருமாள் என்பவருக்கு வஞ்சிமார்த்தாண்டன் என்னும வேணாட்டுச சிற்றரசன் எழுதிய பாருடக்கவி வருமாறு:

"சேமா வயககு செயயா......மயாற்கடற் சேதிபர்கோன
மாமால் புதுவைச சடையன (னனென) மகைகையுககே
ஆமானே யந்த ஆயிழை செய்த...தாசையெல்லாம்
போமாறு கணடுவிட் டாளெனறு கூறுமப் பூஙகொடிக்கே"

"காவிரியைச சோணாட்டைக் காராளர் தம்மரபை
நாவலரைக காவலரை நலலோரைப்—பூவலயம்
உள்ளத தகுமபுதுவை யூரைச் சிறப்பிததான
பிளளைப் பெருமாள் பிறந்து."

இக்கவியில பிள்ளைப் பெருமாள பிள்ளையை காராளர் மரபு என்று குறிக்கப்பட்டிருப்பது நோக்கததககது கார ஆளா, கார்காததார என்பன ஒருபொருட் கிளவிகள.

இதுகாறும் கூறியவாற்றால், சோணாட்டுப் புதுவைச் சடையன் கார்காததார் மரபைச்சேர்ந்தவன என்றும, நடுநாட்டு வெண்ணெய்நல்லூர்ச் சடையன் தொண்டைமண்டல வேளாளா மரபைச் சோந்தவன் என்றும அறிநதாம்.

இருவரும் தொன்றுதொட்ட சைவவேளாளர்களே. அது கொண்டு சில புலவர்கள இரு வள்ளல்களையும் ஒன்றுபடுத்தி எழுதி விட்டாாகள்.

# திருக்கோவையார் ஆராய்ச்சி

[சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாத பிள்ளை]

(சிலம்பு - உஎ. பரல் கஉ. ௫௫0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெய்வத்தை மகிழ்தல்[1]

தலைமகன் தலைமகளின் காதலை அவள் கண்ணுற்கண்டு நயந்து உட்கொண்டு சென்றெய்தலுற்றவன் அவள் கண்ணினுன் ஆய தன்மைகளை முன்னைத் திருப்பாட்டின்கண் கூறினான. இத் திருப்பாட்டினகண் அதற்குத துணையாகவுள்ள தெய்வத்தை மகிழ்நது கூறுகினறனன் தெய்வம என்பது ஊழ். அஃதாவது "அவரவரான் ஈட்டப்படும் வினைப்பயனை அவரவரே நுகருமாறு அரசர் ஆணைபோல் அமைத்து நிறுததுவது. நியதி, பால், ஊழ், தெய்வம விதி என்பன ஒருபொருட்கிளவி" (பேருரை). "இருவினைப்பயன செய்தவனையே சென்றடைதற்கு ஏதுவாகிய நியதி, ஊழ், பால், முறை, உணமை, தெய்வம், விதி என்பன ஒருபொருட்கிளவி" (பரி உரை). இவற்றுற பெறப்படுவது ஆருயிரின் வினைபபயன் அவ ஆருயிரையே சென்றடைவதற்கு ஆண்டவனுல் ஏறபடுததப்படும இருபத்தொன்பதாம் மெய் யாகிய ஊழ் ஈண்டுத தெய்வம் எனக கூறப்பட்டுளளது. மொத் தம மெய் முபபததாறு மெய் எனினும் ததுவம் எனினும் ஒனறே. நாழிகைவட்டில் நாழிகையினை வரையறுத்துக் காட்டுகின்றது. ஆனுல் அககருவிககு அறிவு இல்லை அறிவில் லாத கருவி அறிவுடைய உயிரால் இயக்கபபட்டு இயங்குகிறது. அதுபோல் ஊழமெய்யும் ஆண்டவன் திருஅருள் ஆணை இயக்க இயங்குகின்றது இவ உண்மை செநநெறியாகிய சிவநெறிக்கே உரியது. அது வரும் திருப்பாட்டுக்களான் உணாக:

"செய்வினையும செயவானும் அதன்பயனும சேர்ப்பானும்
மெயவகையால் நானகாகும் விதிததபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அலலவற்றுக் கில்லையென
உயவகையாற் பொருள்சிவனென் றருளாலே உணர்ந்தறிந்தார்."

—கஉ. சாக்கியநாயனர் - ௫.

"அவையே தானே ஆயஇரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே" —மெய்கண்டான்-நூற்பா-உ.

நாழிகை வட்டிலைப்போன்றே நானிலமும் ஐம்பூதமும் பிறவும் பேரொளிப் பிழம்பாகிய பெரும் பொருளாம விழுமிய முழுமுதல்வனுல் இயந்தியக்க இயங்குகின்றன என்க.

1. 'வளைபயில்' திருக்கோவையார. கூ.

சங்கு நெருங்கின கீழ்ப்புலக்கடலிலே நின்று ஒருவனால் இடப்பட்ட ஒத்தகழி மேற்புலக் கடலில் இட்ட நுகத்தினது துளைக்கண் சென்று கோத்தாற்போலத் தில்லையினிடத்துப் பழையோனது கைலைக்கண் தோழியர் கூட்டத்தினின்றும் நீக்கிக் கெண்டை மீன்போலும் கண்களையுடையாளைக் கைக்கொண்டு தந்த நல்வினையின் விளைவாகிய தெய்வத்தை அல்லது மிக்கன வாகிய பிற தெய்வத்தை வியப்பதும் செய்யேன், நயப்பதும் செய்யேன்.

**வியப்பு**

வியப்பு என்பது மருட்கை எனப்படும். மருட்கை மெய்ப்பாடு எட்டனுள் நான்காம் எண் முறைமைக்கண் நிற்பது. இம் மருட்கை அற்புதம் எனவும்படும். மருட்கை என்பது அறிவினை வேறுபடுத்துக் கண்ட காட்சியினைக் கேட்ட கேள்வியினை விடாது கருதித் தன்னை மறந்து அவற்றின் வண்ணமாய் ஆருயிரை நிற்கச் செய்வது. இம் மருட்கை நான்கு பொருள்பற்றி வரும். அவை புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்ப. இவ்வியப்பு பெருமைபற்றியதாகும். என்னை? கண்டதும் காதல் எல்லையின்றிப் பெருகியதால் எனக்கு அதனை அன்றே துணையாம் தெய்வத்திற்கு இணையும் ஏற்றமும் இல்லென்று இயம்பினன். இவ்வுண்மைகள் வரும் திருப்பாட்டுக்களான் உணர்க.

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.”—தொல், பொருள் - ௨௫௧.

“புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலமை மருட்கை நான்கே.”

“நிலத்தினும்பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவு இன்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.” —குறுந்-௩.

“மன்னும்பதிகம்மது பாடியபின் வயிறுற்றடு சூலை மறப்பிணிதான்
அந்நின்ற நிலைக்கண் அகன்றிடலும் அடியேனுயிரோடருள் தந்தநெஞ்ச
செந்நின்ற பரம்பொருளானவர்தந் திருவாரருள் பெற்ற சிறப்புடையோர்
முன்னின்ற தெருட்சி மருட்சியினான் முதல்வன் கருணைக்கடல் மூழ்கினரே”
—௧௨. திருநாவு-௭௧.

“இன்ன பரிசென் றறிவரிதால் எங்கோர் மருங்கு நிரைக்குள்ளால்
பொன்னும் மணியும் மலர்ந்தஒளி அமுதின் அளாவிப் புதியமதி
தன்னுள் நீரமை யாற்குழைத்துச் சமைத்த மின்னுக் கொடிபோல்வாள்
என்னை உள்ளம் திரிவித்தாள் யார்கொல் என்றங் கியம்புதலும்”
—௧௨. ஏயர்கோன்-௨௨௮.

**நேர்கழி**

கீழ்கடல் என்பது கழிநத பிறபபெனவும், நேர்கழி என்பது செவவையான ஊனறுகோலபோல உறுதி எய்துதற்குத துணை யான காதலனபெனவும உளளுறை உருவகப்பொருள கொளக.

**நுகத்துளை**

மேல்கடல என்பது எய்திய இபபிறபபெனவும, நுகமென் பது இலவாழக்கைபபொறை எனவும, துளை எனபது அருமறை முதலிய உறுதிமொழி கேட்டறகாம செவிததுளை எனவும, கோததல் எனபது வாழ்க்கைததுணையாயிருநது "தகைசான்ற சொறகாததுச சோர்விலா"த துணையாம பெண் எனவும, இரு வரும் முயறசியும உளபபாடும இனறிச 'செமபுலப பெயலநீர் போனறு' அன்புடை யுளளததராயக கலநதமை ஊட்டும தெய் வத திருஆணை எனவும உருவகம கொளக 'தெய்வம' எனபது 'வகுததான' எனனும் வாயமை இறை எனவும கருதுக.

நயவேன் என்பது மிகுததுப பேசேன என்பதாம்.

**மெய்ப்பாடு**

உவகையைச்சார்நத மருட்கை.

**பயன்**

மகிழ்தல், மகிழ்சசிககுரிய பொருளைப் பெறுதற்காய துணை யைப் பாராட்டுதலும மகிழசசிககுரியதே

**புணர்ச்சி துணிதல்**[1]

தெயவததை மகிழாநினறவன் தலைவியை மருவ ஒருபபடு கின்றனன அப்பொழுது ஆணவமாகிய தனமுனைபபற்று இறைபணியாகிய அருளவழி நினறு அருளதுணையாலகூட நினைக்கினறனன. எனவே இது வழுவில கற்பெனவும் "முறபடப் புணராத சொல்லினமையின, கறபெனபபடுவது களவின் வழிததே" (இறை-அகப-கரு) என்று சிறபபிததுச சொலலப் படும் சீரிய கற்பெனவும் கொள்ளுதல்வேண்டும

இபபுணர்ச்சி இயற்கைப்புணர்ச்சி, தெய்வப்புணர்ச்சி, முன்னுறு புணர்சசி, காமப புணாசசி எனச சிறப்பித்துப் பேசபபடும் இயற்கைப புணர்ச்சி புலவரால் கூறப்பட்ட இயல் பினுல் புணாவது. தெயவப் புணர்ச்சி தெய்வத திருவருளால் புணாவது. "முயற்சியும உளப்பாடும இன்றி ஒருகருமம ஒரு வர்க்குக் கைகூடிறறேல் தெய்வததான் ஆயிறறெனப" அதனுல் அது தெய்வப்புணர்ச்சி என்ப புலவராவார் புலனடஙகிய சான்றோர். முன்னுறு புணர்ச்சி என்பது ஒருவாநலம் ஒருவ ரான் முன்னுற நுகரப்படுதல. எனவே ஒருவன் ஒருத்தியாய்

1. 'எழுடையான்' திருக்கோவையார, எ

வாழும் உண்மையும் ஒண்மையும் ஒருங்கியைந்த ஒப்பில் வாழ்வு வாழ்வதே வாழ்வாம். காமப்புணர்ச்சி என்பது அன்பினால் புணரும் புணர்ச்சி இவற்றுள் தெய்வப்புணர்ச்சியே சிறப் பென்பது வரும் திருப்பாட்டான் உணர்க:

"அருகு நின்றார் விளம்புவார் அவர்தாம் நங்கை சங்கிலியார்
பெருகு தவத்தால் ஈசர்பணி பேணும் கன்னி யாரென்ன
இருவ ராலிப் பிறவியைஎம் பெருமான் அருளால் எய்துவித்தார்
மருவும் பரவை ஒருத்தியிவள் மற்றை யவளாம் எனமருண்டார்"

—கஉ. ஏயர்கோன்-உஉக.

ஏழு உலகங்களையும் தனக்கு உடைமைப் பொருளாக உள்ளவன் எட்டுப்புலங்களையும் காத்தருளுதற்கு எட்டுத் திருத்தோள்களை யுடையான். எனக்கு ஆட்படும் தன்மை உண்டாவதற்கு முன்னே என்னை ஆளவொரு புதிதாகிய முறைமையை உடையான். அவனது புலியூரை ஒக்கும் பொன் அனையாள், இவ்வுயர்ந்த பொழிலிடத்து ஒருபொழுதும் விடாது சூழ்தலையுடைய தோழியர் கூட்டத்தை நீக்குதற்குக் காரண மாகிய விதித்துணையாக, மனமே! யாமோர் மணங்காண முன் வருத்துவதாய் வந்து அகப்பட்டது இனிக் கூட்டத்துக்கு உடன்படுவாயாக.

உலகங்கள்—பொழில்கள். அவை அளவில்லன. அவற்றைக் குறிப்பதே ஏழு என்னும் சொல். இஃது,

"ஒருநாள் ஏழுநாள்போற் செல்லும் சேண்சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு." —திருக்குறள், கஉ௬௯.

என்னும் திருவள்ளுவனார் திருப்பாட்டான் உணர்க. அல்லதூஉம் க. தாபரம்-க௯, உ. ஊர்வ-கரு, ௩. அமரர்-கக, ௪. நீர் உறைவன-க0, ரு பறவை-க0, சு நாற்கால்-க0, எ மானிடர்-௯, ஆக எண்பத்து நான்கு நூறாயிரம் என்னும் பிறப்பின் சிறப்பாம் ஏழுவகை எனினும் பொருந்தும். அது வருமாறு:

"தோற்றியிடும் அண்டசங்கள் சுவேதசங்கள் பாரில்
துதைந்துவரும் உற்பீசம் சராயுசங்கள் நான்கில்
ஊற்றமிகு தாபரங்கள் பத்தொன்ப தென்றும்
ஊர்வபதி னைந்தமரர் பதினொன்றோ டுலவா
மாற்றருநீர் உறைவனநற் பறவைகள்நாற் காலி
மன்னியிடும் பப்பத்து மானிடர்ஒன் பதின்மர்
ஏற்றியொரு தொகை அதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்குநூ றாயிரமென் றெடுத்தே."

—சிவப்பிரகாசம், எசு.

(தொடரும்)

ஓம்

# சிவானந்த சிவாச்சாரிய அடிகளார் சிவனடி நீழல் எய்துதல்

*நாடு*

*இவ் அடிகளார் திருவடிநீழல் எய்திய திருநாள் திருவள்ளுவர் ஆண்டு* 1984, *ஆவணித்திங்கள்,* 14-*ஆம் வைகல* (30 8-'53) *ஞாயிற்றுக்கிழமை, கார்த்திகை நாள் மாலை இருபத்தேழரை நாழிகை. இவ்வடிகளார் திருத்தோற்றம் யாழ்ப்பாணத்தின்கண் ஆகும். யாழ்ப்பாணம் கலலூரியில் ஆங்கிலம் பயின்று இளம்புலவர் என்னும் பி. ஏ. பட்டம் பெற்றுத் திகழ்ந்தனர். அன்பு அறிவு அடக்கம் ஒழுக்கம் முதலிய உயர்பண்புகள் ஒருங்கமைந்த நம் அடிகளார் இயற்கையிலேயே உளத்துறவு எய்திய ஒண்மையர்.*

*பணி*

*அடிகளார் தாம் கற்றுத்தேறிய கல்லூரியிலேயே மெய்ந்நூற் பேராசிரிய* (Philosophy professor) *ராகச் சின்னாள் பணியாற்றினர். அடிகளின் உடன்பிறந்தாரும் பிறரும் அடிகளாரை இல்வாழ்க்கையினை மேற்கொள்ளுமாறு பல்காலும் முயன்றனர். அடிகளார் இணங்காது தென்னாடு போந்தனர்*

*துறவு*



*தென்னாடுபோந்து சூரியனார்கோயில் திருமடத்துத் தம்பிரான் முத்துக்குமாரதேசிக அடிகளபால் மெய்கண்ட நூலெனப்படும் சைவசித்தாந்தநூல் அனைத்தையும் முறையாகப் பயின்றனர். உடன்பயின்ற மாணவர் அறுவர் என்ப. அவருள்ளும் மிகநெருங்கியவர் தவப்பெரும் திரு. சிதம்பரம் இலக்கண-முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்களும், திருச்செந்தூர்க் கருங்கல் திருப்பணித்தொடர்ச்சி அனைத்தும் ஒருங்குடன் முடித்து ஒண்புகழெய்திக் கண்ணுதலான் திருவடிபெற்ற ஆறுமுக அடிகளார் அவர்களும் ஆவர். மெய்த்துறவு எய்திய நம் அடிகளார் உள்ளம் கேட்டல் எண்ணல் தெளிதல் கெழுமுதல் என்னும் நானெறியினையே நாடிற்று.*

*கயிலை*

*கெழுமுதல் என்பது நிட்டைகூடுதலாகும். அதற்காம் இடத்தினை ஆய்ந்தனர். தனிமாண்பு வாய்ந்த பனிவரைப்பாங்கர்த் திருக்கயிலைத் தாழ்வரையை எய்தினர். பதினைந்தாண்டு கெழுமி வீற்றிருந்தனர். இந்நிகழ்ச்சி நாற்பதுயாண்டுகளுக்குமுன்னரும்.*

### உறைவு

திருக்காளத்தி, தில்லை, திருஅண்ணாமலை ஆகிய மூன்றிடங்களிலும் முறையே பன்னாட்கள் தங்கிப் பரமனை வழிபட்டுப் பயனெய்திய சிறந்த பண்பினர். இம்மூன்று திருவூர்களும் முறையே அன்பு ஆற்றல் அறிவு விளங்குதற்காம் உறைவிடங்களாகும். ஆவியின் அன்பறிவாற்றல்கள் அகத்து ஆண்டானபால் அமைந்ததுபோலப் புறத்தும் இம்மூவகைய திருவூர்களிலுமே அடிகளார்க்குப் பெரும்பான்மையும் அமைந்திருந்தன. எனினும் அன்பினிலைக்களமாம் திருக்காளத்தியின்கண் மிக்கிருந்தமை தோன்றக் காளத்தி அடிகள் என்றே பலரும் அழைப்பாராயினர்.

### நெல்லைத்தொடர்பு

அடிகளாரின் நெல்லைத்தொடர்பு முப்பதாண்டுகளாக இருக்கும். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தோற்றத்திருவினர், திருவாளர் வ. திருவரங்கம் பிள்ளை அவர்களால் 1928-இல் அடிகளாரைக்கொண்டு சின்னாட்கள் சிவஞானபோத விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. 1929 மார்ச்சு, நெல்லை சைவப்பெரியார் கூட்டம், மே, திருப்பாதிரிப்புலியூர் சைவப்பெரியார் கூட்டங்களிலும் கலந்து பெருந்தொண்டாற்றியுள்ளார்.

### திருவடிப்பேறு

29-8-1953 பாளையங்கோட்டை பாத்திரக்கடை திரு சரவணப் பெருமாள் பிள்ளையவர்கள் இல்லத்து விருந்தினராய்த் தங்கியிருந்தனர். இயல்பாகவே இரண்டு மூன்று ஆண்டுகள் உடல்தளர்வும் மெலிவும் எய்தியுள்ளனர். இந்நிலையில் குறித்த இல்லத்தது 31-8-53 மாலை எதிர்பாரா வகையில் குறிப்பின்றி இறையடிநீழல் எய்தினர். அடிகளார்க்கு அவர்தம் மாணவரும் அன்பரும் ஆற்றொணாப் பரிவுதோற்ற வாழ்த்தும் வணக்கமும் புரிந்தனர். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப்பொறுப்பாளர், திரு வ சுப்பையாபிள்ளையவர்கள் விழைவின்வழிக் கழகப்புலவர் பெருநாவலர் திரு. பு சி புன்னைவனநாத முதலியாரவர்கள் குடமுழுக்கு முதலிய சடங்குகள் புரிந்தனர். எல்லாச்சிறப்புக்களோடும் பொருநைத் துறையிற்சிறந்த வெள்ளைக்கோவில் அடக்கத்திருஇடத்து அன்பர்சூழ்ந்து திருமுறை முழக்க 31-8-53 இரவு நாழிகை இரண்டரைக்கு அடக்கம் செய்யப்பட்டது.

### வேண்டுகோள்

அடிகளார் மாணாக்கர் சிவசம்பு அடிகளார் எனப் புலனாகின்றது. அடிகளார் திருவரலாறும் திருக்கோவிலும் ஆக்க அன்பர்கள் வரலாற்றுக் குறிப்பும் பொருளுதவியும் செய்யுமாறு கேட்கப்படுகின்றனர். மேலும் அடிகளார் மண்டலப்பூசை முன்நிகழவேண்டுதலின் முதற்கண் அண்மையில் பொருளுதவி செய்யப் பெரிதும் வேண்டுகின்றோம். இவைகளை பாளையங்கோட்டை பாத்திரக்கடை திரு. சரவணப்பெருமாள் பிள்ளை அவர்கள் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகின்றோம்.

# செய்திகளும் குறிப்புக்களும்

**எண்பத்தோராவது பிறப்பு நாட்சிறப்பு**

"சித்தாந்தப் பேராசிரியர் - சித்தாந்த முதுபெரும் புலவர்" **திரு. ந. சிவகுருநாத பிள்ளை** அவர்கட்கு 11—8—53 செவ்வாய்க்கிழமையன்று தூத்துக்குடி 'சைவ சித்தாந்தசபை'யினரால் திருஞானசம்பந்த சுவாமிகள் திருமடத்து மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அச்சிறப்பின் சுருக்கம் வருமாறு:

திருக்கோவில் வழிபாடு, திருமுறை ஓதல் முதலிய முன் நிகழ்வுகள் நிகழ்ந்தன. சப்கோர்ட் நீதிபதி திரு. எஸ். மகாராசபிள்ளை, பி. எஸ்ஸி. பி. எல். அவர்கள், சபைத்தலைவர் திரு. சிவ. ந. சின்னக்கண்ணுப் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்களின் வேண்டுகோளின்படி தலைமை பூண்டார்கள். வாழ்த்து, பாராட்டுரை முதலிய சிறப்புக்கள் உள்ளூர் வெளியூர் அன்பர்களால் வழங்கப்பெற்றன. பல கழகங்களும் கலந்துகொண்டன. அவற்றுட் சிறந்த வருமாறு: தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம், தூத்துக்குடி சேக்கிழார் கழகம், திலகவதியார் கழகம் முதலியனவாகும்.

**கலந்துகொண்ட அன்பர்கள்**

டிஸ்டிரிக்ட் முன்சீப் திரு. ஆவுடைநாயகம் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள், நகராண்மை ஆணையாளர் திரு. வேதாசலம்பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள், திரு. ஏ. சி. பாலநாடார் பி. ஏ. பி. எல். அவர்கள், திரு. காரவார் சுப்பையாபிள்ளை அவர்கள், திரு. வ. உ. சி. கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் திரு. கு. சிவராமகிருஷ்ணன் அவர்கள், திரு. மறை திருநாவுக்கரசனார் அவர்கள், திருச்செந்தூர்த் திருக்கோவில் ஆணையாளர் திரு. எம். ஆர். சண்முகசுந்தரம் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள், திருநெல்வேலித் தென் இந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக மானேஜிங் டைரக்டர் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள், மேற்படி கழகப் புலவர் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள், திரு. சி. ஈ. நாயகம் பிள்ளை பி. ஏ. அவர்கள், துணையமைச்சர் திரு. குற்றாலலிங்கம் பிள்ளை அவர்கள், திருமதி ச. சிவகாமி அம்மையார் அவர்கள், திருமதி. வள்ளிநாயகி அம்மையார் அவர்கள் முதலியோராவர்.

திருமடம் சார்பாகத் திருமுகங்கள் வந்தன. அவை, தருமபுரம், மதுரை, திருப்பனந்தாள், பெருங்குளம் முதலியன.

**வழங்கப்பெற்ற பட்டங்கள்**

க. மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் சின்னப்பட்டம் தவத்திரு சோமசுந்தரதேசிக சுவாமிகள்: சித்தாந்த குருசிரேட்டர். உ. கும்பகோணம் திரு. பி. டி. குமாரசாமி செட்டியாரவர்கள்: சித்தாந்த ஞானாகரர், ந. சிதம்பரம் திரு. ஆ. சு. கணபதிப்பிள்ளையவர்கள்: சித்தாந்த அருள்நிதி, ச. திருக்களம்பூண்டி திருமதி பார்வதியம்மையார்: சித்தாந்தஞானமணி, திருவாளர், இ. வென்னிமாலைப் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் நன்றி கூறினார்கள். வழிபாடும் பேராசிரியரவர்களின் திருநீறு வழங்கலும் நிகழ நிறைவுற்றது.

**இந்தியைத் திணிப்பது நாட்டின் ஒற்றுமைக்குப் பேரிடர்**

முதல் அமைச்சர் திரு. நேரு அவர்களின் கழற்றுரை (எச்சரிக்கை). தில்லியிலுள்ள பார்லிமெண்டு இந்தி சங்க முதலாண்டு விழாவின் தலைமை உரையின்கண் இந்திமொழி பேசப்படாத பகுதிகளில் இந்தியைத் திணிக்க முயற்சித்தால் அது நாட்டின் ஒற்றுமைக்கே பேரிடரான நிலைமையை உண்டாக்கிவிடக்கூடும். மொழி என்பது தனி முதன்மை வாய்ந்த

தோர் செயதி. மககளிடையே அதனுல உளவொற்றுமையை வளாககமுடியும் இல்லையேல கடுமையான தபபெண்ணஙகளே முளேககவிட்டுக கடைசியில சணடை மூட்டிவிடும இந்யமான மொழிககடாவில் தவறுதலாக அடி எதும எடுததுவைக்காமலிருப்பது மிகவும இனறியமையாததெனபதே. கடா - பிரசசனே.

## டாக்டர் திருமூர்த்தி ஐயர் அவாகளின பிரிவு

திரு ஐயா அவாகள தமிழார்வம மிக்குடையவாகள். தமிழ்வளர்சசிக்காம் தொணடு பலவறறிலும கலந்துளளவாகள. அவாகள் 26—8—53-ல பெஙகளூரிலிருந்து மைசூருககுப போகுவழியில் புகைவண்டியில் இறநதனா அகவை 68. அவாகள் இறப்பு தமிழுககோா இழப்பே. அவாகள ஆவி ஆணடவன் அடியில இன்புறுவதாக. அவாகள் குடும்பத்தார்கசூ நம பரிவுரை ஆறுதலளிக்குமாக.

## இலங்கை வாஞெலித் தமிழ்க்கலே மன்றத்தின் முத்தமிழ் விழா

வெளளவததை சைவமஙகையா கலலூரி மணடபததில குறிதத விழா சூலைததிஙகள் 17, 18, 19-ஆம நாட்களில சிறப்பாக நடந்தது. முறையே அமைசசா திரு. சி சி. பொனனமபலம அவாகள் விழாவினேத் தொடஙகி வைததாாகள மனறததலைவா பணடிதா கா. பொ. இரததினம அவாகள், திரு. கோ ஆழவாாப்பிளளே C. C S, அவாகள, பேராசிரியா திரு க. ச. அருணநதி அவாகள, கொழும்பு முறைமன்றததலைவா திரு. கந்தராசா அவாகள தலைமை தாஙகினுாகள பேராறிஞா பலரின சொற்பொழிவும, இசைவிருநதும், நடனககாட்சிகளும் நிகழநதன.

## கோதாவரி வெள்ளக் கொடுமை (16-8-1953)

கோதாவரி மாவடடததில 28000 ஏககா நனசெய் நிலமும், 7000 ஏக்கா புனசெய நிலமும மூழகிவிட்டனவாம. பொதுவாகப் போலாவரம் வட்டமும (தாலுகா) சிறபபாக நகரமும மிக்க கேடுற்றன. ஊர்க்காவல் நிலேயம, வேளாணமை விளக்கம கூறுவோா நிலேயம, ஆட்சியினா துவக்கப் பெணபள்ளி, காலநடை மருததுவநிலேயம், அஞசலநிலேயம ஆகியவை மூழகிவிட்டன ரூபா முப்பதினுயிரம மதிப்புள்ள செயற்கை ஏரு கரைந்துவிடடது போலாவர வட்டததில எணணூறு வீடுகள் அழிவு. 15 வட்டஙகளில 1140 ஏககாப் புனசெயப் பயிாகள அழிந்தன. மககள் உயிாககுக கேடினறு, 13 கால்நடைகள மாயந்தன. கோயாக்கள் வாழும் பததுக கிராமஙகள மூழ்கின இவாகள் உயிரோம்ப மலேமேலேறினர். 80000 பேருககு உணவளிககப்படுகிறது எனத தெரியவருகிறது.

## தில்லியில் தமிழ்த் திருவிழா

1953 ஆகஸட் 29 காலே 7 மணிக்கு ஆரும் தமிழ்ததிருவிழா மிகக சிறப்பாகக கொணடாடப்படடது. சுருக்கம வருமாறு. இது ரீடிங பெருவழியிலுள்ள 'தென்னிநதிய கலேக்கழக'த்தில நின்றும் புறப்பட்டு அணிசெயயப்பட்ட ரீகல அரஙகததுத துவஙகப்பெற்றது. பாரதநாட்டின் மக்கட்டலேவர் இராசேநதிரப்பிரசாத அவாகள் நன்கு வரவேற்கப்பட்டு விழாவைத துவககிவைததாாகள். அரும்பேசசின சுருக்கம்: தமக்குத் தமிழத தெரியாததுபற்றி வருந்துவதாகக் கூறினா தென்னிந்தியா மீது இநதியைத திணிககவோ மற்ற மொழிகளே அமுக்கிவைக்கவோ ஒருவரும் முயற்சிக்கமாட்டாா என்ற உறுதிமொழியை அளிததார். இதற்கு மாருக எல்லா மொழிகளும் வளர்சசி அடைந்து நாட்டின பொதுக்கலே நாகரிகத்தை வளம்படுததவேண்டுமெனறு விரும்புவதாகவும் கூறினுர்.

துணை மக்கட்டலைவர் சா இராதாகிருட்டிணன் அவர்கள் விழாத் தலைமைபூண்டார்கள். அவர்கள் பேசியதின் பிழிவு: நம நாட்டில பல வகை மொழிகள் நாட்டின பலவகை அழகுகளுக்குக காரணமாயிருக்கின் றன தமிழ்மொழி இந்தியாவுக்குப் பல பொருள்கள் அளித்துள்ளது. 'ஒன்றே குலமும ஒருவனே தேவனும' எனறு போதித்தவா ஒரு பெரும் தமிழ்ப்புலவா. பிறமொழியாளரும தமிழமொழியிற காணப்படும சிறந்தோர் களின் வரலாறுகளை அறிந்துகொள்ளுதல வேணடும அதனால நாட்டின் ஒற்றுமை மிகும

இலங்கை ஹைகமிசனா சி குமாரசாமி அவர்கள் இலஙகையில் தமிழர் தமிழ்மொழி வளாசசிக்காகச செய்துள்ள அருமபெரும தொண்டினைப் பாராட்டிப் பேசினா டாகடா அரஙகநாதம அவாகள் தமிழ்வளாசசிக் கழகத்தின வேலையைப் பாராட்டிப பேசினர் பேரவை புலவரும பெரு மககளுமாக ஆயிரத தைஞ்னூறறுவருககு மேலிருப்பா.

1953 ஆகஸ்டு 30 காலை இலககியப்பகுதிக்குத தலைவா திரு தெ பொ. மீனாட்சிசுநதரம பிள்ளை அவாகள். பல நூற்றாணடுகளாக வளர்ந்து வரும தமிழ இலககியததின் வரலாறுகள் யாவறறையும பொதுமக்கள அறிய விளககசசுருககமாக ஏறபாடுசெய்துள்ள தமிழவிழாகமொணடு நடததி வோரின திறலைப் பாராட்டினா டாகடா, வரதராசன் அவாகள் சஙகஇலக்கியததின சிறப்புகளுள பத்துப்பாட்டில அடஙகிய அரும் பெரும செயதிகளையும, தமிழ்ப பெரும புலவாகள தமிழநாட்டின அழகிய காட்சிகளை அருமையும அழகும பொருந்தச சிததிரிததுளள திறலையும பாராட்டினாகள். திரு எ. முததுசிவன அவாகள தொனமைத தமிழாின் அரிய நாகரிகப்பணபுகளையும குறிககோளகளையும சித்திரிததுளள தொலகாபபியததின சிறப்பைப பேசினாாகள திரு. கி. வா சகந்நாதன அவாகள எட்டுத தொகையிறகாணும நுட்பஙகளைப் பேசினாாகள் புதுத் தில்லியில் உறையும் திரு. மு. கோவிநதசாமி அவாகள திருககுறள் நாலடியாா போனற அறநூற்களின் சிறப்பைப பேசினாாகள இலஙகை திரு. க. பொ. இரததினம் அவாகள காந்திஅடிகளும திருவள்ளுவரும் எனனும பொருளபறறிப் பேசினாாகள் திரு. முனிசாமி அவாகள் திருககுறள்பற்றிப பேசினாாகள

பிற்பகலில் திரு ம பொ சிவஞானகிராமணி அவர்கள் சிலப்பதி காரம் பற்றியும, டாகடா வரதராசனாா அவாகள் மணிமேகலைபற்றியும், திரு. பி. எஸ். வரதராச ஐயர் அவாகள் சிந்தாமணிபற்றியும், திரு. கி. வா. சகந்நாதன அவாகள் பன்னிருதிருமுறை பற்றியும் பேசினாாகள்.

பரிசுபெற்ற நூலாசிரியர்கள்

**1. மருத்துவம்** கர்ப்பஸ்திரீகளுக்குச் சில யோசனைகள்—டாக்டர் திரு. கே வேஙகடசாமி. **2. ஆராய்ச்சி** திருக்குறள் சொல்லடைவு—தமிழ்மணி திரு. வேலாயுதம் பிள்ளை **3. கல்வி, மனவியல்பு, உண்மை, சமயம்** ஸ்ரீ இராமகிருஷ்ண உபநிடதம்—திரு சககரவாததி இராஜ கோபாலாசசாரியார். **4 இயற்கை, விஞ்ஞானம், உழவு:** மண்வளம்—திரு. பி. கோதண்டராமன. **5 சிறுகதை** பவளமல்லிகை—திரு. கி. வா. ஜகந்நாதன். (ஒவ்வொரு நூலுககும தனித்தனி ரூ. 500 பரிசு)

---

திருநெல்வேலித், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.